இலஞ்சம் தவிர்
களம் -21

நெஞ்சம் நிமிர்
வெற்றி -10

# நேர்மை நெறி

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

**(NERMAI NERI)** (Reg.No.349/2001)

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

அக்டோபர் 2023

**₹ 10**

## *நமது பேராசையின் விளைவுதான் ஊழல்!*
## *நமது தேவைகளை மட்டுப்படுத்துவோம்*



## ஊழல் நம் நாட்டின் சாபம்

**PUBLISHED BY**

**ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை**

பதிவு மற்றும் செயல் அலுவலகம்:

155, “நம்பகம்”, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயனாபுரம், சென்னை-600023

தொலைபேசி எண்: 044 2674 1007

e-mail : acmchennai2001@yahoo.co.in

website : anticorruptionchennai.com

## நேர்மையானவர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### நான் பிச்சை எடுக்கிறேன்

ஷீராவஸ்தி என்ற ஊரில் ஒரு சமயம் புத்தர் தங்கியிருந்த போது அந்த ஊரில் பஞ்சம் தலைவிரித்தாடியது. உண்ண உணவின்றி மக்கள் வாடினர். அந்த ஊரில் பெரும் செல்வந்தர்கள் இருந்தும் உணவின்றி வாடும் ஏழை மக்களுக்கு உதவ யாரும் முன் வரவில்லை.

பஞ்ச காலத்தில் அனைத்தையும் தானம் செய்து விட்டால், இறுதியில் நாம் பஞ்சத்தில் சிக்கித் தவிக்க நேரிடுமோ என்று நினைத்து சுயநலத்துடன் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

ஒரு நாள் புத்தர், தன் முன்னே கூடியிருந்த பல செல்வந்தர்களைப் பார்த்து, “கனவான்களே! பஞ்சத்தால் ஏழை எளிய மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உங்களில் யாருக்குமே கிடையாதா?” என்று கேட்டார். அவர் பேசியதைக் கேட்ட செல்வந்தர்கள் அனைவரும் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தனர்.

புத்தர் மீண்டும். “ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? உங்களில் ஒருவருக்குக்கூட பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கிடையாதா?” என்று சற்று உரத்த குரலில் கேட்டார். அப்போது,

அந்தக்கூட்டத்திலிருந்து ஒரு சிறுமி வெளிப்பட்டு, “ஏன் இல்லை! இதோ.... நான் இருக்கிறேன் சுவாமி ’ என்றாள் புத்தர் உட்பட அனைவரும் அந்த சிறுமியைப் பார்த்தனர்

“அருகில் வா! உன்னால் என்ன செய்ய முடியும் குழந்தாய்?” என்று கேட்டார் புத்தர்.

“இவ்வூர் மக்களுக்கு என்னால் உதவ முடியும்” என்றாள் சிறுமி

“ஏப்படி?”

“என் தந்தை பெரிய கோடீஸ்வரர். ஆனாலும் யாருக்கும் உதவ மாட்டார். நான் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்து இவ்வூர் மக்களின் பசியைப் போக்குகிறேன். பிச்சை போடும் தர்மவான்கள் இவ்வூரில் உண்டு” என்றாள் சிறுமி.

அவளது பேச்சையும், தர்ம சிந்தனையுள்ள உள்ளத்தையும் கண்டு அப்படியே மெய் சிலித்துப் போனார் புத்தர். சொன்னபடியே அச்சிறுமி வீடுவீடாகச் சென்று பிசையெடுத்தாள். ஒரு கோடீஸ்வர வீட்டுச் சிறுமி வீடுவீடாகச் சென்று பிச்சை எடுக்கிறாளே என்ற விஷயம், அத்தனை செல்வந்தர்களின் உள்ளத்தையும் தொட்டது. அவர்கள் உணவுகளையும் தானியங்களையும் அவ்வூர் ஏழை மக்களுக்கு வாரி வாரி வழங்கினர்

அவர்களது தர்ம சிந்தையால் விரைவிலேயே அந்த ஊரில் பஞ்சம் நீங்கியது. அதற்காகப் பாடுபட்ட அச்சிறுமி மிகவும் போற்றப்பட்டாள்.



# ஊழலின் ஊற்றுக்கண் எது?

வே. கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்

சுதந்திர இந்தியாவில் ஊழல் என்பது சர்வ சாதாரணமாக மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் ஓர் அங்கமாக ஆகிவிட்டது. அதிலும் அரசியல் வாதிகளின் ஊழல், அவர்களை முன்னிறுத்தி அதிகாரிகள் வர்க்கம் செய்யும் ஊழல், அப்படி தலைமையில் இருக்கும் ஊழல் அடிமட்டம் வரை பாய்ந்து இன்று அது புறையோடிக் கிடக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவிலும் சரி, அதன் பின்னர் சுதந்திர இந்தியாவிலும் கிராம அதிகாரிகள், கிராம முன்சீப், கணக்குப் பிள்ளை, வெட்டியான், தலையாரி என்று அடிமட்ட ஊழியர்கள் ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் நல்ல மரியாதையும் செல்வாகும் உள்ளவர்களாகத் திகழ்ந்தார்கள். பட்டாமணியம் அல்லது கிராம முன்சீப், கணக்குப் பிள்ளை அல்லது கர்ணம் என்பவர்கள் அந்த கிராமத்திலுள்ள நிலங்கள், அதன் சர்வே நம்பர்கள், புறம்போக்கு வகையறாக்கள், அவை எங்கெங்கு எவ்வளவு இருக்கின்றன போன்ற விவரங்களை விரல் நுனியில் வைத்திருந்தார்கள். மேலும் இதுபோன்ற கிராம நிர்வாக அதிகாரிகள் அதே கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். மரியாதையும், செல்வாக்கும் அவர்களுடைய பதவிக்காக இல்லையென்றாலும், அவர்கள் நடந்து கொள்ளும் முறையால் பெரும் நிலக்கிழார் முதல் அடிமட்ட விவசாயக் கூலிகள் வரை அவர்களிடம் உண்மையான அன்போடும், மரியாதையோடும் நடந்து கொண்டிருந்தார்கள்.

இந்த பாரம்பரிய பதவி முறை ரத்து செய்யப்பட்டு கிராம அதிகாரிகள் வி.ஏ.ஓ. என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் அதே கிராமத்தை அல்லது பகுதியைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டுமெங்கிற அவசியம் இல்லை. மாநிலம் முழுவதுக்குமாக ஒரு தேர்வு நடத்தப்படும். அந்தத் தேர்வு எவ்வளவு நேர்மையாக நடக்கும் என்பது தெரியாது. அதில் தேர்வடைந்தவர்கள் கிராம நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு பொறுப்பு ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறு அறையொன்று அலுவலகம் எனும் பெயரில் திறக்கப்பட்டிருக்கும். அவர் எப்போது வருவார், எப்போது மக்களின் மனுக்களைப் பெற்றுக்கொண்டு அதற்கான ஆவணங்களைக் கொடுப்பார் என்பதை யெல்லாம் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். அவசரத்துக்குப் போய் அவர்களைப் பார்த்துவிடவோ, அல்லது நமக்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுவிடவோ முடியுமா? அந்தக் கடவுளுக்குக்கூடத் தெரியாது

இன்று தினசரி செய்தித் தாள்களைப் பிரித்ததும் நம் கண்களில் படும் செய்தி இந்த ஊரில் இன்னார் லஞ்சம் வாங்கும்போது பிடிபட்டார், கைது செய்து அழைத்துச் செல்லப்பட்டார் என்பதுதான் நம் கண்களில் படுகின்றன. அப்படி கைது செய்யப்படும் அரசாங்க அதிகாரிகளின் பட்டியலில் அதிகமாக மாட்டிக் கொள்வோர் கிராம நிர்வாக அதிகாரிகள் தான். மிக உயர்ந்த மாவட்ட ரெவின்யு அதிகாரிகள்கூட மாட்டிக் கொண்டிருக்கின்றனர். நல்ல பதவி, நல்ல வருமானம், சமூகத்தில் நல்ல அந்தஸ்து இவை அத்தனையும் இருந்தும், ஏழை எளிய மக்கள் உட்பட பொதுமக்களிடமிருந்து லஞ்சமாகப் பெற்று தங்கள் சுகபோக வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வது என்பது இப்போதெல்லாம் பழக்கமாகிவிட்டது.

லஞ்சம் தேவைக்கு வாங்குவது என்பது ஒரு புறம்; ஆடம்பரத்துக்கு வாங்குவது என்பது அதிகமானது. “இந்தியாவில் எங்கு பார்த்தாலும் ஊழல் நிறைந்துள்ளது”. ஊழலுக்கான பல உதாரணங்கள் வரலாற்றில் பதிவாகியிருக்கின்றன. ஆங்கிலேயர்கள் இந்தியாவை சிறிது சிறிதாக ஆக்கிரமித்ததற்கு அவர்கள் லஞ்சம் கொடுத்துத்தான் அப்படிப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இப்போதெல்லாம் மக்கள் ஊழலை சர்வ சாதாரணமாக வாழ்க்கையின் ஓர் அங்கமாக எடுத்துக் கொள்ளத் துவங்கி விட்டனர்

சர்வதேச நிறுவனங்கள் வெளியிடும் ஆய்வுப் பட்டியலில், “ஊழல் மிகுந்த நாடுகளில் இந்தியா கௌரவமிக்க முதல் சில இடங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டது” “ஊழலுக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது தேவைக்காக ஊழலில் ஈடுபடுவது ஒன்று. மற்றொன்று பேராசையால் ஊழல் செய்வது. தேவைக்காக லஞ்சம் வாங்குபவர்களுடைய ஊதியம் போதுமானதாக இல்லாவிட்டால், அவர்களுடைய ஊதியத்தை அவர்கள் தேவைக்கேற்ப உயர்த்தி வழங்குவதால் அவர்கள் செய்யும் ஊழலைத் தடுத்துவிட முடியும். ஆனால், பேராசையும் குறுகிய காலத்தில் கொள்ளையடித்து கோடீஸ்வரர்களாக ஆகவேண்டுமென்றும், வசதிகளையும் ஆடம்பரங்களையும் விரும்பி ஊழல் செய்பவர்களைத் தடுக்க முடிவதில்லை.”

அவருடைய அசைக்கமுடியாத, தீர்க்கமான முடிவு என்னவென்றால், “அரசியல்வாதிகள் பேராசையின் காரணமாக ஊழல் செய்யத் தொடங்குகின்றனர். அதில் ருசி கண்டபின் அவர்களைப் பின்பற்றி எல்லோருமே பேராசையால் லஞ்ச லாவண்யங்களில்,

குறுக்கு வழிகளில் சம்பாதிக்கத் தொடங்குகின்றனர். ஊழல் பெருகுவது இப்படித்தான்” அவர்களுக்கு திரும்பவும் பதவிக்கு வர இந்த லஞ்சப் பணம் தேவைப்படுகிறது. இதனால், லஞ்சமும் ஊழலும் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது

நீதிமன்றம் அரசை ஏதாவது ஒரு துறையில் நடந்த முறைகேட்டைச் சுட்டிக் காட்டிவிட்டால், உடனே சில அமைச்சர்கள் நீதிமன்றங்கள் அரசாங்கத்தின் நிர்வாகச் செயல்பாட்டில் தலையிடக்கூடாது என்று நியாயம் பேசத் துவங்கிவிடுகிறார்கள். தேர்தல் ஆணையம் சில கட்டுப்பாட்டுகளை விதித்தால், மத்தியில் பெரிய பதவிகளில் இருக்கும் அமைச்சர்கள் உட்பட பலரும் அந்தக் கட்டுப்பாடுகளை மதிப்பதில்லை.

நிர்வாகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகளின் நியமனத்தில் வெளிப்படையான தன்மையை அரசாங்கம் கடைபிடிக்க வேண்டுமென்பது அவரது கருத்து. அது மட்டுமல்லாமல் சரியான சில பதவிகளுக்கு நேர்மையான அந்தப் பதவிக்கு ஏற்ற நபர்களை அரசு நியமனம் செய்ய வேண்டும். இந்த முறை இப்பொதெல்லாம் கடைபிடிக்கப்படுவதில்லை, எதிர்ப்புகள் பல இருந்தும், நியாயமற்ற முறையில், நேர்மையில்லாத ஆட்களைப் பொறுப்பான பதவிகளில் கடந்த காலத்தில் நியமித்திருக்கிறார்கள் என்பதை பல உதாரணங்களைக் காட்டிச் சொல்ல முடியும். என்றாலும் பட்டவர்த்தனமாகத் தெரிந்த ஒரு நியமனம் தாமஸ் அவர்களின் நியமனம். நீதிமன்றம் தலையிட்டு கண்டிப்பான உத்தரவு போட்டும், விடுவேனா பதவியை என்று உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்துவிட்டு வேறு வழியில்லாத நிலையில் பதவி விலகிய காட்சிகளையெல்லாம் பார்த்தோமல்லவா? இதெல்லாம் ஒரு ஜனநாயக நாட்டில் நடப்பது நமது ஜனநாயக அமைப்புக்கே கேவலமும், அவமானமும் இல்லையா? ஆனால் அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டியவர்கள் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. தாங்கள் தெரிந்தே செய்த தவறுகளை, ஊழல்களை நியாயம் என்று அடித்துப் பேசுவதோடு, நாடாளுமன்றத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் வந்தால் விவாதத்துக்குத் தயார் என்று சவால் விடுகின்றனர். இதுபோன்ற விவாதங்கள் தரும் முடிவுதான் என்ன? பெருவாரியான எண்ணிக்கை இருந்தால் குற்றச் சாட்டுகள் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்று மார்தட்டிக் கொள்வதைத் தவிர, இதில் உண்மைக்கு என்றுமே வெற்றி கிட்டியதில்லை.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். “திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது” என்று. சூடான தோசைக் கல்லை அடுப்பில் இருக்கும்போது தொட்டுவிட்டு கை கொப்புளித்து, ஐயோ ஐயோ என்று அலறுபவனைப் போல ஊழல் பேர்வழிகள் எதிலாவது கைவவைத்து “ஐயோ ஐயோ” என்று அலறினால் அன்றி இவர்கள் திருந்த மாட்டார்கள். மகாகவி பாரதி சொல்கிறான், “படித்தவன் பாவமும் சூதும் பண்ணினால், போவான், போவான், ஐயோவென்று போவான்” என்று. ஊழலில் கோடிக்கணக்கில் சுருட்டிய பெரிய மனிதர்கள் வாழ்க்கையில் நிம்மதியாக இருக்கிறார்களா. திருடிச் சேர்த்த சொத்து அவர்களிடம் நிலைத்து நிற்கிறதா என்பதையெல்லாம் ஒரு ஆய்வு செய்து வெளியிட வேண்டும். அந்த பட்டியலில் உள்ளவர்களில் எத்தனை பேர் திருடிய சொத்தை அனுபவிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். ஊழலை எதிர்ப்பதாக வேஷம் போடுபவர்களோ, அல்லது அதுபோன்ற போராட்டங்களில் ஊழல் பேர்வழிகளே சேர்ந்து கொண்டு குரல் கொடுப்பவர்களோ ஊழலை ஒழித்துவிட முடியாது. கோடானுகோடி இந்திய மக்கள் ஒன்று திரண்டு இவர்களுக்குத் தேர்தலில் ஜனநாயக வழியில் படுதோல்வியைத் தழுவச் செய்வது ஒன்றே ஊழலை ஒழிக்கும் வழி. அதற்கு இந்திய மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும். விழித்துக் கொள்வார்களா என்றும் தெரிவதில்லை.

**ஊழல் பெருகுவதற்கான முக்கிய காரணங்கள்**

- பொதுநலம்குறைந்து சுயநலம் பெருகி விட்டது.
- லஞ்சம் வாங்குவதைப் பொதுமக்கள் கண்டு கொள்ளாமல் இருத்தல்.
- லஞ்ச வழக்குகளிலிருந்து விடுபடத் தேவைப்படுவதும் லஞ்சப்பணமே.
- ஊழல்வாதிகளுக்கு பொது நிகழ்ச்சிகளில்கொடுக்கப்படும் உயர்ந்த மரியாதை.
- பொது மக்களே பணம் வாங்கி வோட்டளித்தல்.
- நல்லவர்களை “இளிச்சவாயயன்” என்று பொது மக்களே கிண்டல் அடிப்பது.
- லஞ்சம் கொடுத்து முடித்த வேலைகளை “சாதனை” என்று பிரகனப்படுத்துவது.
- “லஞசம் கொடுக்காமல் எந்த ஒரு செயலையும் செய்ய முடியாது” என்று பொதுமக்களை லஞ்சம் கொடுக்க வைப்பது.
- லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் சமூக அந்தஸ்தாகக் கருதப்படுகிறது.

## செயற்குழுக் கூட்டம் (23-09-2023)

இன்று (23 செப்டம்பர் 2023) நமது இயக்கத் துணைத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில், பொது செயலாளர், ஐந்து செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். நமது சட்ட ஆலோசகரும் கலந்து கொண்டார். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஆகஸ்டு மாத வரவு செலவு கணக்கு நிதிச் செயலாளரால் வாசிக்கப்பட்டது . வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. அனைத்து மாவட்டங்கள் மற்றும் கிளைகள் சென்ற ஆண்டு (2022-23)க்குரிய வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அனைத்து வரவு செலவு கணக்குகளை அடுத்த மாதம் 15ம் தேதிக்குள் தலைமையகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3, உறுப்பினர் சேர்க்கையின் போது மாவட்டங்கள் / கிளைகள் புதிய உறுப்பினர் கட்டணத்தை முழுமையாக தலைமையகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாவட்டங்கள் / கிளைகளுக்கு உரிய பணம் அந்தந்த மாவட்டங்கள் / கிளைகளுக்கு திரும்ப **NEFT** மூலம் அனுப்பி வைக்கப்படும்.

4. நிலுவையிலுள்ள நீதிமண்ற வழக்குகளின் தற்போதைய நிலை பற்றி விளக்கப்பட்டது. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவைத் தயாரிக்கும் நமது செயலாளர் (சட்டம்) திரு A நஃபீஸ் அஹமத் அவர்களை விரைவில் தயாரிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது. அதே போன்று கரூர் மாவட்ட நெடுஞ்சாலைத் துறை ஊழல்,, தார்விலை வீழ்ச்சியில் ஊழல், மாவட்டக்கல்வி அதிகாரி மீதான ஊழல் புகார் ஆகியவை பற்றி யும் விவாதிக்கப்பட்டது

5. நமது இயக்கத்தின் உறுப்பினராக கீழ்க்கண்ட 9 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

<u>ஆயள் உறுப்பினர்கள்</u>

1. **திரு C . பரமசிவம்**
2. **டாக்டர் திரு --பிரவின் குமார்**
3. 

<u>ஆண்டு உறுப்பினர்கள்</u>

**3 திரு A. முக்தர் அஹமது**
**4 திருமதி K ஜெயந்தி**
**5. திரு T. நாராயணன்**
**6. திரு பெருமாள் கருப்பன்**
**7. திருமதி K. சுடர்க்கொடி**
**8. திருமதி அங்கையர்க்கன்னி**
**9. திரு J. மஹேஷ்வர்**

எல்லா விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு உறுப்பினராகிறார்கள்**.**

6. நமது இயக்க ஆரம்ப நிறுவனர் திரு – குப்புராஜ் அவர்களின் நூறாவது நினைவு தினம் டிசம்பர் 9ம் தேதி வருகிறது. அதைக் கொண்டாட அன்று மாலை நான்கு மணியளவில் மைலாப்புரிலுள்ள நியூ உட்லாண்ட்ஸ் ஹோட்டலில் அவரது மகள் திருமதி ஜெயந்தி ஆனந்தன் அவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்கள். அதில் கலந்து கொள்ள விருப்பப் படுகிறவர்கள் நமது சட்டச் செயலாளர் திரு நஃபீஸ் அஹமத்திடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்

7. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| வே அய்யப்பன் | **வே கார்த்திகை ராஜன்** |
| **துணத் தலைவர்** | **பொது செயலாளர்** |

## தற்போதைய இந்திய அமைப்பின் முரன்பாடுகள்

*மும்பை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் டி.கே. ஸ்ரீவஸ்தவா தான் உணர்ந்தறிந்த, தற்போதைய இந்திய அமைப்பின் முரன்பாடுகளை குறிப்பிடுகிறார்* சாதாரண மக்களுக்கு ஒரு சட்டம்; பெரும் புள்ளிகள், அரசியல்வாதிகளுக்கு ஒரு சட்டமா? நீங்களே முடிவு செய்யுங்கள்:

1. .ஒரு குடிமகன் இரண்டு இடங்களில் வாக்களிக்க முடியாது. ஆனால், தலைவர் விரும்பினால், அவர் ஒரே நேரத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் இருந்து தேர்தலில் போட்டியிடலாம்.
2. .ஒரு குடிமகன் சிறையில் இருந்தால் வாக்களிக்க முடியாது. ஆனால் ஒரு அரசியல்வாதியோ அல்லது ஒரு தலைவரோ சிறையில் இருந்தாலும் தேர்தலில் போட்டியிடலாம்.
3. .ஒரு சாதாரண மனிதன் ஏதாவது ஒரு சிறிய குற்றத்திற்காக சிறைக்கு சென்றால் கூட அவனுக்கு வாழ்நாள் முழுவதும் அரசு வேலைக்கு தடை விதிக்கப்படும், ஆனால், கொலை அல்லது பாலியல் பலாத்காரம் போன்ற பெரிய குற்றம் செய்யும் தலைவன் எத்தனை முறை சிறையில் இருந்தாலும், அவர் தேர்தலில் தாராளமாக போட்டியிடலாம், அவர் பிரதமராகவும் அல்லது ஜனாதிபதியாகக் கூட போட்டியிடலாம். எந்த தடையும் இல்லை.
4. ஒரு சாதாரண மனிதன் வங்கியிலோ, அரசாங்கத்திலோ அல்லது தனியார் கம்பெனியிலோ, ஒரு சுமாரான வேலையைப் பெற, பட்டதாரியாக இருக்க வேண்டும். ஆனால், அரசியல்வாதி கட்டைவிரல் ரேகை வைக்கும் படிப்பறிவே இல்லாதவராக இருந்தாலும், அவர் இந்தியாவின் நிதி அமைச்சராகவோ பிரதமராகவோ இருக்க முடியும். அவர் பள்ளிக்கே சென்றதில்லை என்றாலும், நாட்டின் கல்வி அமைச்சராகலாம்.
5. ஒரு குடிமகன், இராணுவத்தில் சேர குறிப்பிட்ட வயது வரம்பிற்குள் இருக்க வேண்டும். ஒரு சிப்பாயாக வேலை பெற, நீங்கள் சில கிலோமீட்டர் ஓடியாவது காட்ட வேண்டும். ஆனால் அரசியல்வாதி படிப்பறிவில்லாதவராகவும், உடல் ஊனமுற்றவராகவும், மற்றும் 90 வயதானவராகவும் இருந்தாலும், அவர் பாதுகாப்பு அமைச்சராக இருக்கலாம்... அவர் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைகளுக்கு கட்டளையிடலாம்.
6. அவருக்கு எதிராக எத்தனை வழக்குகள் இருந்தாலும், அந்த தலைவர் காவல்துறை, அல்லது உள்துறை அமைச்சராகவே இருக்கலாம்.
7. ஒரு அரசு ஊழியர் 30 முதல் 35 ஆண்டுகள் சேவைக்குப் பிறகும் ஓய்வூதியம் பெற நிபந்தனைகளும், காலவரையும் உண்டு.
8. ஆனால் ஒரு எம் எல் ஏ, எம்பி சேவை செய்வதாக சொல்லி பதவிக்கு வந்து, 5 வருடம் லஞ்சம், ஊழல் மற்றும் எத்தனை அராஜகம் செய்தாலும், எந்த நிபந்தனையும், கால வரையும் இன்றி வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் கிடைக்கும்,

- **இதில் அனைவருக்கும் எங்கே ஒரே நீதி இருக்கிறது?**
- **இந்த அமைப்பு மாற்றப்பட வேண்டுமா, இல்லையா?**
- **தலைவர் மற்றும் மக்கள் இருவருக்கும் ஒரே சட்டம் இருக்க வேண்டுமா, இல்லையா?.**

இந்த செய்தியை அனுப்புவதன் மூலம் நாட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்த தயவுசெய்து உங்கள் ஆதரவை வழங்கவும். நீங்கள் முன்வரவில்லை என்றால் எந்த தலைவரையும் குற்றம் மட்டுமே சொல்லாதீர்கள். ஆம், உங்கள் இழப்புக்கு நீங்களும் பொறுப்பு ஆவீர்கள்.

***திரு. டி.கே. ஸ்ரீவாஸ்தவா, தலைமை அரசு வழக்கறிஞர், பம்பாய் உயர் நீதிமன்றம், பம்பாய்.

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**

**Savings A/C No: 000901000041657**

**<u>இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:</u>**

| | | |
|---|---|---|
| **திரு வெ அய்யப்பன்,** | **துணைத்**தலைவர் | **: 75501 82438** |
| திரு **V** கார்த்திகை ராஜன், | பொதுச்செயலாளர் | **: 87783 12823** |
| திருமதி பாக்யலட்சுமி, | மேலாளர் | **: 90031 25142** |

**E- Mail** : acmchennai2001@yahoo.co.in

**Website** : anticorruptionchennai.com

## தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரக உருவாக்கம்

ஊழல் தடுப்பு குறித்த சந்தானம் குழுவின் பரிந்துரைகளின்படி, மத்திய அரசு 1964 ஆம் ஆண்டு தற்சார்புடைய விழிப்புப்பணி ஆணையத்தை அமைத்தது. இதன் அடிப்படையில், பெரும்பாலான மாநிலங்களில், மத்திய அரசின் மாதிரியைப் போன்ற விழிப்புப்பணி ஆணையங்கள் அமைக்கப்பட்டன. தமிழ்நாடு அரசு, 1965 ஆம் ஆண்டு, விழிப்புப்பணி ஆணையரின் தலைமையில் மாநில விழிப்புப்பணிக் குழுவை அமைத்தது. விழிப்புபணி ஆணையர், சென்னை, நிருவாகச் சவால்களை பொது சேவைகளில் ஊழலைத் தடுத்தல் மற்றும் தனிப்பட்ட ஊழல் வழக்குகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகையில் கையாளப்பட வேண்டிய நடைமுறை ஆகியவை தொடர்பாக அரசிற்கு ஆலோசனைகளை வழங்குகிறார்.

முறையற்ற அல்லது ஊழல் நோக்கங்களுக்காக, தனது அதிகாரங்களைப் பயன்படுத்தும் அல்லது அதிகாரங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் அரசுப் பணியாளர் ஒருவரைப் பற்றிய யாதொரு தகவல் குறித்தும் விசாரணையை மேற்கொள்ள அல்லது விசாரணைக்கான காரணம்/புலனாய்வை மேற்கொள்ள இந்த ஆணையத்திற்கு எல்லை வரம்பும் அதிகாரமும் உள்ளது.

பொது நிர்வாகத்தில் ஊழலைக் கையாளுவது தொடர்பான முதல் நடவடிக்கையாக, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினை தமிழ்நாடு அரசு அமைத்தது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அரசின் நிர்வாகத்துறையான மனிதவள மேலாண்மை (N) துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. அரசுப் பணியாளர்களுக்கு எதிரான விசாரணை மற்றும் புலனாய்வு விவரங்கள் தொடர்பான, விசாரணைகள்/புலனாய்வின் முடிவுகள் குறித்த அறிக்கைகள் மேற்கொண்டு மேல் நடவடிக்கை எடுப்பதற்காக விழிப்புப் பணி ஆணையருக்கு அனுப்பப்படும்.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையின் முக்கியச் செயல்பாடுகள்:**

1. **மாநில விழிப்புப் பணி ஆணையத்தால்/அரசால் மற்றும் நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அதன் தொடர்புடைய முறைகேடுகள் பற்றிய விசாரணைகளை நடத்துதல்.**
2. **இயக்குநரகத்தால் சேகரிக்கப்பட்ட தகவல் மற்றும் புள்ளிவிவரங்களை மாநில விழிப்புப் பணி ஆணையத்திடம் வழங்குதல்.**
3. **அரசுப் பணியாளர்கள் மீது சுமத்தப்படும் குற்றசாட்டுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து விசாரணை நடத்துதல்.**
4. **கையூட்டு மற்றும் ஊழல் வழக்குகள் தொடுப்பதற்கான புலனாய்வு தகவல்களைச் சேகரித்தல் மற்றும் 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்பு சட்டம் மற்றும் 26/07/2018 அன்று நடைமுறைக்கு வந்த திருத்தப்பட்ட ஊழல் தடுப்பு சட்டம் 2018 வரம்பு எல்லைக்குள் வரக்கூடிய குற்றங்களை விசாரணை செய்தல்.**
5. **நம்பத்தகுந்த புகார்கள் குறித்து, உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு அரசுப் பணியாளர்கள், கையூட்டு வாங்கும்போது பொறிவைத்து கையும் களவுமாகப் பிடித்தல். தற்போது, தமிழ்நாடு முழுவதும் 46 துணைப்பிரிவுகள் உள்ளன.**

விரைவான நீதிமன்ற விசாரணையை உறுதி செய்வதற்காக, 2011 ஆம் ஆண்டில் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளின் விசாரணைகளுக்காகவே, சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சியில் தலா ஒன்று என நான்கு சிறப்பு நீதிமன்றங்களை அரசு நிறுவியுள்ளது. 2013-14 ஆம் ஆண்டின் போது, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றம் என நான்கு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. 10.09.2014 அன்று, ஊழல் தடுப்புச் சட்டம் (1988)ன் கீழ் வரும் வழக்குகளைத் தீர்ப்பதற்கு, தமிழ்நாடு முழுவதும் உள்ள அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிறப்பு நீதிமன்றங்கள்/ துணை நீதிபதிகளுக்கான நீதிமன்றங்களில் பணியாற்றும் முதன்மை தலைமை நீதிபதிகள் / சிறப்பு நீதிபதிகளுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது. மாநிலம் முழுவதும் மொத்தம் 36 நீதிமன்றங்கள் உள்ளன.

தற்போது சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் தரத்தில் உள்ள ஒழுங்குநடவடிக்கை தீர்ப்பாய ஆணையர்களுக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தின் விசாரணைகள், பரிந்துரைக்கப்பட்டு அவரது

தலைமையில் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான வழக்குரைஞர்களின் உதவியுடன் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தின் செயல்பாடு குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, ஒவ்வொரு ஆண்டும் அரசு கண்காட்சியான "சென்னை வர்த்தகக் கண்காட்சியில்" அரங்கு அமைக்கப்பட்டு வருகிறது. இந்த அரங்கில், ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய எண்மமுறையில் அச்சிடப்பட்ட பதாகைகள் மற்றும் இயக்குநரகத்தின் செயல்பாடுகள் குறித்து மூத்த அதிகாரிகள் பார்வையாளர்களுக்கு எடுத்துரைக்கும் வகையிலமைந்த ஊழலுக்கு எதிரான காணொலிக் காட்சிகளைப் பொதுமக்களுக்குத் திரையிடுதல் போன்றவை பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

ஒரு முதல் நடவடிக்கையாக அனைத்து அரசு துறை அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் பின்வரும் செய்தியை அறிவிப்புப் பலகையில் காட்சிபடுத்துமாறு அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் அரசு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

**"கையூட்டு பெறுவது சட்டத்திற்கு எதிரானது. கையூட்டு தொடர்பான புகார்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்படலாம்."**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலகம் இரண்டு கட்டணமில்லா தொலைபேசி எண்களைக் கொண்டுள்ளது.

(1) ஊழல் எதிர்ப்பிற்கான உதவி அழைப்பு எண் 1064 மற்றும்

(2) விழிப்புப் பணி அழைப்பு எண் - 1965, இதன் வாயிலாகப் புகார்தாரர்கள் புகார் செய்யலாம்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் எண்.293, எம்.கே.என். சாலை, ஆலந்தூர் , சென்னை- 600016 என்ற முகவரியில் உள்ள அரசு கட்டடத்தில் மே'2016 முதல் செயல்பட்டு வருகிறது.

---

## இலவசங்கள் ஒரு டிக்கிங் டைம் பாம்

**OpinionExpress.In | புது டெல்லி | கருத்து எக்ஸ்பிரஸ் மூலம்**

***இலவசங்களால் இந்தியா ஏற்கனவே பெரும் சேதத்தை சந்தித்துள்ளது. துரதிர்ஷ்டவசமாக, அனைத்து பிராந்தியக் கட்சிகளும், ஓரளவிற்கு, பாரதிய ஜனதாக் கட்சியும், காங்கிரஸும் பொறுப்பற்ற ஜனரஞ்சகத்திலும், வெறித்தனமான நலவாதத்திலும் ஈடுபடுகின்றன. இலவசக் கல்வி, மருத்துவம் போன்றவற்றுக்கு நியாயம் இருந்தாலும், கிரைண்டர்கள், வாஷிங் மிஷின்கள், தொலைக்காட்சி பெட்டிகள், மடிக்கணினிகள், மானியத்துடன் கூடிய புனித யாத்திரைகள், இலவச மின்சாரம், விவசாயக் கடன் தள்ளுபடி போன்றவற்றுக்கு எந்த நியாயமும் இருக்க முடியாது.***




இலவச கலாச்சாரம் அரசியல் உயரடுக்கின் மீது மட்டுமே குற்றம் சாட்டப்படுகிறது, இருப்பினும், அதிகாரவர்க்கக் கொள்கை வரைவு ஸ்காட்-இலவசமாக விடப்படுகிறது. நீதித்துறை அமைப்பு அரசியல் வகுப்பினரை அதிருப்தி அடையச் செய்யும் என்பதால், அரசாங்கத்தின் விளம்பர வரவு பாதிக்கப்படும் என்பதால், ஊடகங்கள் இந்தப்

பிரச்சினையைப் பற்றி ஒருபோதும் விவாதிக்காது. நாட்டின் ஏழை வரி செலுத்துவோர், தங்கள் சொந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தை பெரும் பகுதி மக்களுக்கு விநியோகிப்பதற்காக வீட்டில் உட்கார்ந்து வசதிக்காக விநியோகிக்கப்படுவதைப் பார்க்கும் காட்சி தளத்தை அனுபவிக்கிறது, ஏனெனில் அரசாங்கத்திற்கு கண்ணியமான வாழ்க்கைக்கான வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான பார்வை இல்லை. . இந்த மகத்தான தோல்வியைச் சமாளிக்க, தோல்வியுற்ற நிர்வாகம் மற்றும் வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பது தான் இந்த இலவசம்.

1992ல் இந்தியா முதன்முதலில் தனியார் துறையை ஊக்குவிப்பதன் மூலம் தனது பொருளாதாரத்தை 'திறக்க' மற்றும் 'தாராளமயமாக்கல்' தொடங்கியபோது, கீழே உள்ள 30% இந்தியர்களின் உண்மையான வருமான வளர்ச்சி குறைந்துவிட்டது. அனைவருக்கும் வாக்கு இருப்பதால், அரசியல்வாதிகள் அவர்களை புறக்கணிக்க முடியாது. அதனால்தான் அவர்கள் பணமாகவோ அல்லது பொருளாகவோ வருமான ஆதரவு அல்லது மானியங்களை உறுதியளிக்க வேண்டும். கடுமையான கடினமான பொருளாதார சூழலில் பெரும்பான்மையான இந்தியர்கள் மிதக்க முடியும் என்பதை இந்த சோப்புகள் உறுதி செய்கின்றன. இது இல்லாமல், அவர்கள் அரசாங்கங்களை அதிகாரத்திலிருந்து தூக்கி எறியலாம் அல்லது ஊடகங்களும் பொது கலாச்சாரமும் அவர்களுக்கு என்ன உணவளிக்கின்றன என்று கேள்வி கேட்கத் தொடங்கலாம். கார்ப்பரேட் ஆதிக்கம் செலுத்தும் ஆளும் வர்க்கத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒரு ஜனநாயகம், அதன் ஆட்சி தொடர மக்கள் ஆதரவு தேவை. ஏழைகளுக்குச் சலுகைகளும் இலவசங்களும் தேவையான வாக்குகளை வாங்குகின்றன. பொருளாதாரம் தொடர்ந்து அவர்களுக்கு விகிதாச்சாரத்தில் வெகுமதி அளிப்பதை உறுதி செய்வதற்காக இந்தியாவின் வசதி படைத்தவர்கள் செலுத்த வேண்டிய சிறிய விலை இது.

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் இந்திய வாக்காளர்களை இலவசங்கள் எனப்படும் பலதரப்பட்ட இன்னபிற பொருட்களைக் கவர்வதில் ஒன்றையொன்று விஞ்ச முயல்கின்றன. இந்த போக்கு சமீப காலங்களில் அதிக வேகத்தை பெற்றுள்ளது, அரசியல் கட்சிகள் தங்கள் சலுகைகளில் புதுமையானது, ஏனெனில் 'பாரம்பரிய இலவச நீர் மற்றும் மின்சாரம் இனி தேர்தல் நல்வாழ்த்துக்கள். இலவசங்களைச் சுற்றி கட்டமைக்கப்பட்ட அரசியல் உரையாடல், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலின் வேரை பெரிய அளவில் அசைப்பதால் ஆபத்து நிறைந்ததாக இருக்கிறது. நடைமுறைப்படுத்த முடியாத தேர்தலுக்கு முந்தைய வாக்குறுதிகள் வாக்காளர்களின் தகவலறிந்த முடிவெடுப்பதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இலவச கலாச்சாரத்தின் வடிவமைப்பு, செயல்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் உள்ள இடைவெளிகளை சரிசெய்ய இது அழைப்பு விடுக்கிறது.

உண்மையில், இலவசங்களால் நாடு ஏற்கனவே பெரும் சேதத்தை சந்தித்துள்ளது. துரதிர்ஷ்டவசமாக, அனைத்து பிராந்தியக் கட்சிகளும், பாரதீய ஜனதா கட்சி (பாஜக) மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சிகளும் பொறுப்பற்ற ஜனரஞ்சக மற்றும் வெறித்தனமான நலன் புரிவாதத்தில் ஈடுபடுகின்றன. இலவசக் கல்வி, மருத்துவம் போன்றவற்றுக்கு நியாயம் இருந்தாலும், கிரைண்டர்கள், வாஷிங் மிஷின்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மடிக்கணினிகள், மானிய விலையில் யாத்திரைகள், இலவச மின்சாரம், விவசாயக் கடன் தள்ளுபடி போன்றவற்றுக்கு எந்த நியாயமும் இருக்க முடியாது. ஜனரஞ்சகத்தின் விளைவுகளுக்கு எதிராக யாரும் முன்னர் எச்சரிக்கவில்லை என்பது அல்ல. இது "கீழே ஓட்டம்" மற்றும் "நிதி பேரழிவுக்கான விரைவான பாஸ்போர்ட்" ஆகும்.

**ஃப்ரீபி இந்தியாவின் கதையை காயப்படுத்த அச்சுறுத்துகிறது**

முடிவுகள் அனைவரும் பார்க்க வேண்டும். சமீபத்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வில், “அவசியமான நிபந்தனையின் மூலம் அடையாளம் காணப்பட்ட 10 மாநிலங்களில் இருந்து, அதாவது கடன்/ஜிஎஸ்டிபி விகிதத்தில் இருந்து அதிக அழுத்தத்திற்கு உள்ளான மாநிலங்களின் முக்கிய துணைக்குழுவை நாம் அடையாளம் காண முடியும். பீகார், கேரளா, பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் அதிக அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன. GSDP என்பது மாநில GDP ஆகும். 2021-22ல் அதிக கடன்-ஜிஎஸ்டிபி விகிதம் உள்ள மாநிலங்களில் பஞ்சாப் 53.3%, ராஜஸ்தான் 39.8%, மேற்கு வங்கம் 38.8%, கேரளா 38.3% மற்றும் ஆந்திரப் பிரதேசம் 32.4% அதேசமயம் நிதிப் பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை ( FRBM) சட்டம் 2022-23 நிதியாண்டுக்குள் மாநில அரசுகளுக்கு (மத்தியத்திற்கு 40%) 20% கடன்-ஜிடிபி விகிதத்தை பரிந்துரைத்தது. இந்த கடன் அளவு மிகவும் கவலைக்குரியது மற்றும்

வருவாயில் மெதுவான வளர்ச்சியுடன் இணைந்து ஜனரஞ்சக திட்டங்களின் கீழ் உள்ள உறுதியான செலவுகள் மற்றும் மானியங்களின் விளைவாகும்.

எவ்வாறாயினும், பெரும்பாலான மாநிலங்கள் தங்கள் நிதி பற்றிய ஆரோக்கியமான படத்தை இடுகையிடுகின்றன, இது இந்த இலவசங்களுக்கு நிதியளிக்கும் பெரும்பாலான கடன்கள் பட்ஜெட்டுக்கு அப்பாற்பட்ட FRBM கண்காணிப்புக்கு அப்பால் நடக்கின்றன. மாநிலங்கள் தங்கள் பொது நிறுவனங்களின் புத்தகங்களில், மாநிலத்திற்கு எதிர்கால வருவாயை உத்தரவாதமாக அடகு வைத்து கடன் வாங்குகின்றன. திறம்பட, கடன் சுமை நன்கு மறைக்கப்பட்டாலும், அரசின் கருவூலத்தில் உள்ளது. பஞ்சாபின் கடன்-ஜி.எஸ்.டி.பி விகிதம் மிக மோசமானது - மேலும் மோசமடைந்து வருகிறது. கடந்த 6 ஆண்டுகளாக மாநிலக் கடன் மற்றும் GSDP விகிதம் 40%-க்குக் கீழே போகவில்லை என்று கவலைப்படுவதற்குப் பதிலாக, ஆம் ஆத்மி கட்சி (AAP) அரசாங்கம், செப்டம்பர் முதல் சுமார் 51 லட்சம் குடும்பங்கள் மின்சாரக் கட்டணம் செலுத்த மாட்டோம் என்று அறிவிக்கிறது. 2022 ஜூலை 1 முதல் ஒரு பில்லிங் சுழற்சிக்கு 600 யூனிட் இலவச மின்சாரம் என்ற ஆம் ஆத்மியின் தேர்தல் வாக்குறுதிக்கு இணங்க இது உள்ளது.

ஜனரஞ்சக அரசியலில் முக்கிய கற்றல் பாடங்களை வழங்கும் லத்தீன் அமெரிக்கா ஒரு உதாரணம். 1920 களில் இருந்து 1970கள் வரை ஜனரஞ்சகவாதம் செயலில் இருந்தது, உழைக்கும் ஏழைகள் தொழில்மயமாக்கலில் அதிருப்தியின் காரணமாக பிரேசிலின் கெட்டுலியோவர்காஸ் மற்றும் அர்ஜென்டினாவின் ஜுவான் பெரோன் போன்ற சின்னங்களின் பின்னால் ஒன்றுபட்டனர். ஜனரஞ்சக அரசாங்கங்கள் ஏழைகளுக்கு நன்மைகளை வழங்க பணவீக்க நிதியுதவியை நாடின. 1980 களில், கட்டுப்பாடற்ற பொதுச் செலவுகள் அதிக நிதிப் பற்றாக்குறை, தாங்க முடியாத பொதுக் கடன் மற்றும் தீர்க்க முடியாத பணவீக்கத்தை ஏற்படுத்தியது. லத்தீன் அமெரிக்காவின் 'லாஸ்ட் தசாப்தம்' தொடர்ந்து வந்தது. 1970களில் 5.6% ஆக இருந்த வளர்ச்சி, 1.3% ஆகச் சுருங்கி மற்றொரு பத்தாண்டுகளுக்கு தேக்கமடைந்தது. 1990 களில், பிரேசில் போன்ற நாடுகளில் பணவீக்கம் 1,000% ஐ எட்டியது, மேலும் ஏழைகள் அதிவேகமாக பாதிக்கப்பட்டனர். மெக்சிகோ, அர்ஜென்டினா, பிரேசில் உள்ளிட்ட பெரிய பொருளாதாரங்கள் நலிந்தன. மற்றும் லத்தீன் அமெரிக்கர்களில் பாதி பேர் வறுமையில் தள்ளப்பட்டனர். லத்தீன் அமெரிக்காவின் படிப்பினைகளையும், லத்தீன் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் தலைமுறை நிதிச் சீர்திருத்தங்கள் 2000களின் முற்பகுதியில் அரசியல் ஸ்திரத்தன்மையை எவ்வாறு அறிமுகப்படுத்தியது என்பதையும் இந்தியாவும் அதன் அரசியல் பங்குதாரர்களும் உள்வாங்குவது நல்லது. லத்தீன் அமெரிக்காவைப் போலவே அதே பாதையில் செல்வது இந்தியாவுக்கும் 'இழந்த பத்தாண்டுகளை' ஏற்படுத்தலாம்.

**சரிசெய்தல் மற்றும் படிகள்**

இலவசங்களின் பிரச்சனை ஒரு அரசியல்; வெளியேறுவதற்கான வழி எளிதானது: அனைத்துக் கட்சிகளும் (மத்திய மற்றும் மாநில அளவில்) ஒன்றாக அமர்ந்து, செய்யக்கூடாதவைகளின் பட்டியலை வரையவும், அவர்கள் யாரும் செய்யாத விஷயங்களின் எதிர்மறையான பட்டியல். மாநிலங்கள் வழிதவறிச் செல்லும் நிலையில், மாநிலங்கள் தங்கள் சுதந்திரத்தை கூட்டாட்சியின் உணர்வில் இன்னும் தக்கவைத்துக் கொள்வதை உறுதிசெய்யும் அதே வேளையில், நிதி பழமைவாதத்தை ஆதரிக்க மாநிலங்களுடன் இணைந்து செயல்படுவது மையத்தின் பொறுப்பாகும். இதற்கு மையம் ஒரு இறுக்கமான கயிற்றில் நடக்க வேண்டும் மற்றும் தலைமையில் வலுவான தொலைநோக்கு தலைமை தேவை. FRBM சட்டமான நிதிச் செலவினங்களைச் சரிபார்க்க ஏற்கனவே உள்ள சட்டத்தில் அதிக முக்கியத்துவம் மற்றும் நம்பிக்கை வைக்கப்பட வேண்டும்.

நீதித்துறை தலையீடு: இலவசக் கலாச்சாரம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் பாராளுமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்கள் மற்றும் விவாதங்கள் கடினமாக உள்ளன. எனவே, நடவடிக்கைகளை முன்மொழிவதற்கு நீதித்துறை ஈடுபாடு அவசியம்.

**ECI மாதிரி நடத்தை விதிகள்**: இந்திய தேர்தல் ஆணையம், தகவல் அறிந்த வாக்காளர் நடத்தையில் கையாளப்படுவதைத் தடுக்க, தேர்தல் அறிக்கைகளை திறம்பட ஒழுங்குபடுத்த, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்கான மாதிரி நடத்தை விதிகளை அமல்படுத்துவதை எதிர்பார்க்கலாம்.

**சாலை வரைபடம்**

தேர்ந்தெடுக்கப்படுவது கொலை செய்வதற்கான உரிமம் அல்ல என்பதால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தன்னிச்சையாக செயல்படக்கூடாது. முடியாட்சி முறை மற்றும் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவை தெளிவான வேறுபாட்டைக்

கொண்டுள்ளன, இதில் பிந்தைய அமைப்பில், நிதி மற்றும் அதன் மேலாண்மை உட்பட அலுவலகத்தில் இருக்கும் அனைத்து செயல்களுக்கும் தலைவர் பொறுப்பு. இந்தியாவில், பல பிராந்திய மற்றும் தேசிய தலைவர்கள் தங்களை கடவுளின் அவதாரமாக கருதுகின்றனர். இந்த தலைவர்கள் பொதுப்பணத்தை பொறுப்பற்ற முறையில் செலவிடுவது ஒரு ஒழுங்கான சமூகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் அவர்கள் மீது நியாயமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் அவர்கள் சமூகத்தின் மேக்ரோ நலனைப் பாதுகாக்கும் வகையில் தரமான நிர்வாகத்தின் மீது இலவசங்களை வழங்கி சமூகத்தை சீரழிக்க வேண்டும். மற்றும் நாட்டின் வளர்ச்சி.

**பிரசாந்த் திவாரி**

---

## <u>பணத்தை சேமிப்பதில் சிரமமா? இதோ 9 வழிகள்!</u>

நம்மில் பெரும்பாலானோர், ''பணத்தைச் சேமிக்க முடியவில்லையே, முதலீடு செய்ய பணம் இல்லையே...'' என்று புலம்புவதைப் பார்க்க முடிகிறது. இவ்வளவுக்கும் அவர்கள் அதிக சம்பளம் வாங்குபவர்களாக, நன்கு சம்பாதிப்பவர்களாக இருக்கிறார்கள். பிறகு, எப்படி அவர்களால் பணத்தைக் கொஞ்சம்கூட சேமிக்க முடியாமல் போகிறது.

இதற்கு முக்கியமான காரணம், அவர்களேதான். தங்களை மனரீதியாக, செயல்ரீதியாக சிறிது மாற்றிக்கொண்டால் இவர்கள் நிச்சயம் அதிகமான அளவில் பணத்தை சேமிக்க முடியும். அதற்கான வழிகள் குறித்து இந்த வார The Salary Account எடிஷனில் விளக்குகிறார் நிதி ஆலோசகர் சிவகாசி மணிகண்டன்.

**1. உங்கள் சம்பளத்தை ஒரு நாளுக்கு கணக்கிடுங்கள்**

ஒரு மாதம் என்று எடுத்துக்கொண் டால், அதற்கு பொதுவாக 30 நாள்கள் இருக்கிறது. இந்த 30 நாள்களுக்குக் கணக்கிட்டுத்தான் ஒருவருக்கு மாதச் சம்பளம் தரப்படுகிறது. உதாரணமாக, ஒருவரின் மாதச் சம்பளம் ரூ.50,000 என வைத்துக் கொள்வோம். அவருக்கு வாரத்தில் சனி மற்றும் ஞாயிறு இரு தினங்கள் விடுமுறை எனில், அவர் பணிபுரியும் நாள்கள் சுமார் 22 நாள்கள் ஆகும். இதன்படி, அவரின் ஒரு நாள் சம்பளம் சுமார் ரூ.2,275 ஆகும்.

அவர் ஒரு பொருளை ரூ.25,000 கொடுத்து வாங்கப் போகிறார் எனில், அதற்கு அவர் கிட்டத்தட்ட 11 நாள்கள் வேலை பார்க்க வேண்டும். அந்த உழைப்பு அளவுக்கு அந்தப் பொருளின் மதிப்பு இருக்கிறதா எனச் சிந்தித்துப் பார்த்தால், அந்தப் பொருளை வாங்க வேண்டுமா, வேண்டாமா என்கிற முடிவுக்கு வரலாம்.

மேலும், இந்தப் பொருளைக் கடனில் வாங்கி வட்டி கட்டினால் வட்டியையும் சேர்த்து தொகையைக் கணக்கிடுங்கள். உதாரணமாக, ரூ.25,000-க்கு வாங்கும் பொருளுக்கு வட்டியுடன் சேர்த்து ரூ.32,000 செலுத்துவதாக வைத்துக் கொண்டால், அதற்கு கிட்டத்தட்ட 14 நாள்கள் அதாவது, அரை மாதம் உழைக்க வேண்டும். வாங்கும் பொருளின் மதிப்பு அரை மாத உழைப்புக்கு இணையாக இருக்கிறதா என்று பார்த்தால் அதை வாங்க வேண்டுமா, வேண்டாமா? அது இல்லாமல் சமாளிக்க முடியுமா என்கிற முடிவைத் தெளிவாக எடுக்க முடியும்.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான எந்தவொரு பொருளையும் வாங்குவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், ஆடம்பரமான, நம் தினப்படி வாழ்க்கைக்குத் தேவை இல்லாத பொருளை வாங்க நினைக்கும்போது, அதை நிச்சயமாக வாங்கித்தான் ஆக வேண்டுமா என்று யோசியுங்கள். இன்று வரைக்கும் அந்தப் பொருள் இல்லாமல்தானே இருந்திருக்கிறோம் என்று சிந்தியுங்கள். அதனால், ஏதாவது கஷ்டப்பட்டிருக்கிறோமா என்று யோசித்துப் பார்த்தால், அந்தப் பொருள் அவசியமா, இல்லையா என்பது தெரிந்துவிடும்.

எந்தவொரு பொருளை வாங்கும்போதும் இப்படி யோசித்தால், தேவை இல்லாத பொருள்கள் வாங்குவது குறைந்து, கணிசமான பணம் மிச்சமாகும். இந்தப் பணத்தைக் கொண்டு நிச்சயம் சேமிக்கலாம்.

**2. கிரெடிட் கார்டு அலெர்ட்**

கிரெடிட் கார்டு என்பது அடுத்த மாதத்தில் கிடைக்கப் போகும் சம்பளத்தை முன்கூட்டியே செலவு செய்ய உதவும் ஒரு கருவியாகும்.

கிரெடிட் கார்ட்டைப் பொறுத்தவரை, சுமார் 40 - 50 நாள்களுக்கு வட்டி இல்லா காலம் இருக்கும். இந்தக் காலத்தில் கிரெடிட் கார்டு மூலம் வாங்கிய பொருள்களுக்கான பணத்தைக் கட்டாவிட்டால், அதற்கு ஆண்டுக்கு 35% - 40% வட்டி கட்ட வேண்டி வரும். மேலும், கிரெடிட் கார்டு இருந்தால் போதும், அவசரமான எந்த செலவு வந்தாலும் சமாளித்துக்கொள்ளலாம் என்கிற அசட்டுத் தைரியத்தை உருவாக்கிவிடுகிறது. இதனால், கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி தேவை இல்லாத பொருள்களைக்கூட வாங்கி, கடனாளியாகிவிடுகிறோம். எனவே, கூடிய வரையில் கிரெடிட் கார்டைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது, நம்மிடம் அதிகமான பணம் புழங்க அற்புதமான வழியாகும்.

**3. முதலில் சேமிப்பு... அடுத்து செலவு**

ஒருவர் அவரின் சம்பளத்தில் சுமார் 10% - 30% தொகையை ஆரம்பத்திலேயே சேமிப்பு மற்றும் முதலீட்டுக்கென எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, தபால் அலுவலகம் அல்லது வங்கித் தொடர் வைப்புத் திட்டம் (RD), மியூச்சுவல் ஃபண்ட் சீரான முதலீட்டுத் திட்ட (SIP) முதலீட்டுக்கு சம்பளக் கணக்கில் இருந்தே பணம் போவதுபோல் ஏற்பாடு செய்துகொண்டால், இந்தச் சேமிப்பு போக மீதமுள்ள தொகைதான் செலவுக்கு இருக்கும். அப்போது சேமிக்க பணம் இல்லை என்கிற நிலை இருக்கவே இருக்காது.

இதை என் வாடிக்கையாளர் ஒருவருடன் செய்துகாட்டி, அவரை சேமிக்கவும் முதலீடு செய்யவும் வைத்தேன். அவரது மாதச் சம்பளம் ரூ.50,000. அவருக்கு சம்பளத்தில் மாதம்தோறும் பிராவிடென்ட் ஃபண்டாக ரூ.1,800 பிடித்தம் செய்யப்படுகிறது. அவருக்குப் பணி ஓய்வுக்கு இன்னும் ஐந்து ஆண்டுகள்தான் இருப்பதால், பணி ஓய்வுக்காலத்தில் அதிக தொகை வேண்டும் என்றார். அதற்காக எந்த சேமிப்பையும் அவர் செய்யாத நிலையில், ரிஸ்க் இல்லாத வி.பி.எஃப் மூலம் கூடுதலாக 3,600 ரூபாயை அவருடைய சம்பளத்தில் பிடிக்க சொன்னேன். இதுபோக, மியூச்சுவல் ஃபண்ட் மூலம் மாதம்தோறும் எஸ்.ஐ.பி முறையில் ரூ.7,500 முதலீடு செய்ய வைத்தேன். அந்த வகையில், அவருக்கு வழக்கமாக சம்பளத்தில் பிடிக்கப்படும் பி.எஃப் ரூ.1,800 போக கூடுதலாக ரூ.11,100 சேமிப்பாகிறது. இப்படி முதலிலேயே சம்பளப் பணத்தை முதலீட்டுப் பக்கம் திருப்பிவிட்டதால், சேமிக்க பணம் இல்லை என அவர் இப்போது சொல்வதே இல்லை.

**4. சிறிய செலவுகளையும் கவனத்தில் கொள்ளுங்கள்**

சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல் சிறிய செலவுகள் அதிகமாக தொடரும்பட்சத்தில் ஒருவர் அவசியமான செலவுக்குப் பணம் இல்லாமல் பணச் சிக்கல் மற்றும் கடன் சிக்கலில் மாட்டிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. எனவே, சிறிய செலவுகள் என்றாலும் அவை அவசியம்தானா என்பதைக் கவனியுங்கள்.

ஒரு நாளில் 3, 4 முறை டீ, காபி குடிப்பது, புகைபிடிப்பது சிறிய செலவுகளாகத் தெரியும். ஆனால், அந்த சிறிய செலவுகள் மாதக் கணக்கில் ஆண்டுக் கணக்கில் தொடரும்போது பெருந்தொகையாக இருக்கும். உதாரணமாக, மேற்கண்ட செலவுக்கு ஒரு முறைக்கு 35 ரூபாய் ஆகிறது எனில், 22 அலுவலக நாள்களுக்கு சுமார் 750 ரூபாய் ஆகிறது என வைத்துக்கொள்வோம். இதுவே 25 ஆண்டுகளுக்கு ரூ.2,25,000 ஆகும்.

ஆனால், பணவீக்கத்தின்படி இதைவிட அதிகமாகத்தான் ஆகும். இன்றைக்கு 35 ரூபாய் என்பது அடுத்துவரும் ஆண்டுகளில் ரூ.40, ரூ.50 என அதிகரித்துக்கொண்டேதான் வரும். சராசரியாக மாதம் ரூ.1,000 என வைத்துக் கொண்டு, இந்தத் தொகையை ஆண்டுக்கு 12% வருமானம் கிடைக்கக்கூடிய பங்குச் சந்தை சார்ந்த மியூச்சுவல் ஃபண்டில் முதலீடு செய்வ தாக வைத்துக்கொள்வோம். 25 ஆண்டுகள் கழித்து அது ரூ.19 லட்சமாகப் பெருகி இருக்கும். எனவே, சிறிய தொகை என்று எதையும் அலட்சியப்படுத்தாதீர்கள்.

கேபிள் டிவி, ஆன்லைன் சினிமா ஆகியவற்றுக்கான சந்தாவை ஆட்டோ ரெனிவலாக வைத்துகொள்ளாதீர்கள். தேவை இருந்தால் மட்டுமே சந்தா கட்டி பயன்படுத்துங்கள்.

**5. பர்ச்சேஸ் பட்டியல் அவசியம்**

மேலும், மளிகைக் கடை, ஷாப்பிங் ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களின் பட்டியலுடன் சென்றால், தேவை இல்லாத பொருள் வாங்குவது தவிர்க்கப்பட்டு, சேமிப்புக்குப் பணம் கிடைக்கும். இப்படி பட்டியல் போடுவது, தேவையான பொருள்களை வாங்க மறந்துவிட்டு மீண்டும் கடைக்குச் செல்வதையும் தவிர்க்க உதவும்.

**6. வார இறுதி செலவுக்கு ஒருநாள் விடுமுறை**

வெளிநாடுகளில் செலவு செய்வதற்கென்று சில தினங்கள் ஸ்பெஷல் ஆஃபர்கள் அறிவிக்கப்படும். இதற்கு நேரெதிராக, வாரத்தில் ஒரு நாள் தேவை இல்லாத எந்தச்

செலவையும் செய்வதில்லை என்கிற முடிவை நாம் எடுக்க வேண்டும். தியேட்டருக்கு சென்று சினிமா பார்ப்பது, வெளியில் சென்று சாப்பிடுவதை மாதத்தில் ஒருமுறை குறைத்தாலே சுமார் ரூ.1,000 மிச்சமாகும். இந்தப் பணத்தை நீண்ட காலத்தில் முதலீடு செய்து வந்தால் அது பெரும் தொகையாக மாறி நிற்கும்.

**7. தள்ளுபடி விற்பனைகளை சரியாகப் பயன்படுத்தவும்**

மேலும், உண்மையான தள்ளுபடி விற்பனைகளை சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் பணத்தைக் கணிசமாக மிச்சப்படுத்த முடியும். மளிகைப் பொருள்கள் தொடங்கி வாகனங்கள் வரைக்கும் இப்படி தள்ளுபடியைப் பயன்படுத்தி பணத்தைக் கணிசமாக சேமிக்க முடியும். அதே சமயம், தள்ளுபடிக்காக பொருள்களை வாங்கக் கூடாது. தேவையான பொருள்களைத் தள்ளுபடி கிடைக்கும்போது வாங்க வேண்டும்.

**8. கடனில் வீட்டு உபயோகப் பொருள்கள் வேண்டாம்**

டிவி, வாஷிங் மிஷின், ஃப்ரிட்ஜ் போன்ற பெரிய பொருள்களை எல்லாம் பணத்தைச் சேர்த்து வாங்கினால் வட்டிக்குச் செல்லும் பணத்தைக் கணிசமாக மிச்சப்படுத்த முடியும். பணத்தைச் சேமித்து வாங்கும்போது அந்தப் பொருளை பத்திரமாகப் பயன்படுத்தும் எண்ணம் மிக அதிகமாக இருக்கும்.

**9. 30 நாள்கள் தாமத விதிமுறை**

எந்தப் பொருளை வாங்க வேண்டும் என நினைத்தாலும் அதை உடனே வாங்கி விடாதீர்கள். 30 நாள்களுக்குத் தாமதப்படுத்துங்கள். ஆன்லைன் மூலம் வாங்குவதாக இருந்தால் அந்தப் பொருளை ஷாப்பிங் கார்ட்டுக்கு மாற்றிவிடுங்கள். அந்தப் பொருள் அவசியம் தேவை எனில், கட்டாயம் நினைவிலேயே இருக்கும். இல்லை என்றால் மறந்துவிடுவீர்கள்.

நீங்கள் ஒரு பொருளைத் தேர்வு செய்துவிட்டு, அதை வாங்க தாமதப்படுத்துவது தெரிந்தால் விற்பனை நிறுவனம் உங்களுக்கு விலையில் தள்ளுபடி செய்து, அதை உங்களுக்கு ஆஃபர் விலையில் தரத் தயார் என்று மெயில் அனுப்பும். அப்போது அவசியம் என்றால் வாங்கிக் கொள்ளலாம். உங்களால் ஒரு மாதம் காத்திருக்க முடியாது எனில், ஒரு வாரம் காத்திருங்கள். பல நேரங்களில் அப்படி ஒரு பொருளை வாங்க நினைத்ததையே மறந்துவிடுவீர்கள்.

நாம் அடிக்கடி சொல்வதுபோல, பட்ஜெட் போட்டு (சம்பளத்தில் 50% அவசிய செலவுகள், 20% ஆசைக்கான செலவுகள், 30% சேமிப்பு) செலவு செய்யுங்கள். மேலும், குடும்பச் செலவுகளைப் போல் 3 - 6 மாதத் தொகையை அவசரகால நிதியாகச் சேர்த்து வையுங்கள். ஆயுள் காப்பீடு (ஆண்டு வருமானத்தைப் போல் 15 மடங்கு), மருத்துவக் காப்பீடு (ரூ.5 லட்சம் - 10 லட்சம்) எடுத்துக்கொண்டால், செலவுகளுக்குக் கடன் வாங்க வேண்டி வராது. இப்படி செய்தால், பணம் கணிசமாக மிச்சமாகும். அதைச் சேமிக்கலாம், முதலீடும் செய்யலாம்!

பணத்தை மிச்சப்படுத்தும் வழிகளைச் சொல்லிவிட்டோம். இனி, சேமிக்க பணம் இல்லை என்று சொல்ல மாட்டீர்கள் இல்லையா..? சேமிப்பு தொடங்கி லாபகரமான முதலீடுகள் வரை இப்படி பல்வேறு முக்கியமான நிதி விஷயங்களில் நிபுணர்களின் ஆலோசனைகளோடு வாசகர்களுக்கு தொடர்ந்து வழிகாட்டி வருகிறது நாணயம் விகடன். சரியான நேரத்தில் சரியான நிதி முடிவுகளை எடுத்திட இன்றே நாணயம் விகடன் சந்தாதாரராகுங்கள்! .

நன்றி (**நாணயம் விகடன் டீம்)**

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

## வங்கிக் கொள்ளை

**மும்பையில் நடந்த ஒரு வங்கிக் கொள்ளையின் போது .*.**

*கொள்ளையர்கள் துப்பாக்கியுடன், அனைவரையும் மிரட்டினர்* இந்தப் பணம் #அரசுக்கு சொந்தமானது. ஆனால் ,உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்தமானது"" அதனால்,யாரும் எங்களை எதிர்க்க வேண்டாம்! அனைவரும் அசையாமல் கீழே படுங்கள் என்றார்கள். படுத்துவிட்டார்கள் ._

**மனதை மாற்றும் முறை என்பது இதுதான் .**

***". This is called "Mind Changing Concept” Changing the conventional way of thinking."***

*அங்கே ஒரு பெண், கொள்ளையர்களின் கவனத்தைத் திருப்ப அநாகரிகமாக நடந்தாள். அப்பொழுது கொள்ளையர்களில் ஒருவன் , இங்கு நடக்க போவது #கொள்ளை, #கற்பழிப்பு அல்ல என்று மிரட்டி, அமர வைத்தான்.._..

***இதைத்தான், செய்யும் தொழில்களில் கவனம் தேவை என்று சொல்கிறோம்**

**"Being Professional & Focus only on what you are trained""***

*கொள்ளையடித்து விட்டு வீட்டிற்கு வந்தவுடன் கொள்ளையர்களுள் ஒருவன் கேட்டான்" "வாருங்கள் சீக்கிரம் பணத்தை எண்ணி விடலாம்"" என்று . மற்றொருவன் சொன்னான், பொறு, அவசரம் வேண்டாம் . பணம் நிறைய இருக்கிறது .நேரம் அதிகம் செலவாகும். அரசே நாம் எவ்வளவு₹ கொள்ளை அடித்தோம் என்று, நாளை செய்திகளில் சொல்லி விடும்._

***இதைத்தான்,படிப்பை விட அனுபவம் சிறந்தது என்போம்!***

***This is called "Experience.” Nowadays, experience is more important than paper qualifications! ""***

*கொள்ளை நடந்த போதே,வங்கியின் மேலாளர் இச்சம்பவத்தை #காவல்துறையிடம் சொல்ல முனைந்த போது, அவருடைய மேல் அதிகாரி தடுத்து அவரிடம் கூறினார். "வங்கியில் கொள்ளை போனது 20 கோடி தான். நாம் மேலும் 30 கோடி எடுத்து பங்கு பிரித்துக் கொள்வோம். மொத்தமாக ஐம்பது கோடி கொள்ளை போய்விட்டது என்று சொல்லி விடுவோம்" என்றார்_.

**""காற்றுள்ள போதே தூற்றிக் கொள் ""என்பது இது தான்"**

***This is called Swim along with the tide.... Converting an unfavourable situation to yours.***

*இதை கேட்ட மற்றொரு #அதிகாரி "" வருடம் ஒரு கொள்ளை,இவ்வாறு நடந்தால் மிக நன்றாக இருக்கும் "" என்றார் ._

**இதுதான் சுயநலமான உலகம்!**

***This is called Killing boredom World. Personal happiness is much more important than your job.***

*மறுநாள் செய்திகளில்,வங்கியில் 100 கோடி கொள்ளை போய்விட்டது என்று அறிவிக்கப்பட்டது. அமைச்சர் போட்ட உத்தரவு அப்படி. அவர் பங்கு 50 கோடி. _கொள்ளையர்கள் மிரண்டு போனார்கள். பணம் எண்ணும் மிஷின் வாங்கி வந்து,பணத்தை எண்ணத் தொடங்கினர் . _எவ்வளவு எண்ணியும் ,அவர்களால் இருபது கோடிகளுக்கு மேல் போக முடியவில்லை . _கொள்ளையர்களில் ஒருவன் எரிச்சல் அடைந்து ," நாம் உயிரைப் பணயம் வைத்து இருபது கோடி கொள்ளையடித்தோம். ஆனால் இந்த வங்கி அதிகாரிகளும், அமைச்சரும் சிரமம் இல்லாமல், எண்பது கோடி கொள்ளை அடித்து விட்டனர். படிப்பின் அவசியம் இப்பொழுது.புரிகிறது

***இதற்குத் தான் படித்திருக்க வேண்டும் .""என்றான்***

***True. #Knowledge is nowadays very important than money in this world.***

***நாடு, இப்படிப்பட்ட திருடர்களாலும், அமைச்சர்களாலும்<br>தான் ஆளப்படுகிறது! பாவம் மக்கள்!***

## *லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கைகள்*

Kumudam News Desk

1. **லஞ்சம் கேட்ட விஏஓ லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரால் கைது**

மாவட்ட ஆட்சியர் கொடுத்த இலவச வீட்டுமனை பட்டாவை வழங்க லஞ்சம் கேட்ட விஏஓ லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. *7000 ரூபாய் லஞ்சம் பெற்ற போது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக விஏஓவை கைது செய்தனர்.*

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் மாராடி கிராமத்தைச் சேர்ந்தவர் அஸ்வின். இவரது மனைவி சத்யா என்பவருக்கு மாராடி கிராமத்தில் அரசால் வழங்கும் இலவச வீட்டுமனை பட்டா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இலவச வீட்டுமனை பட்டா கடந்த 22.8.2023 அன்று திருச்சி மாவட்ட ஆட்சியரால் 138 பேருக்கு வழங்கப்பட்டது. அன்றைய தினம் மாவட்ட ஆட்சியரிடம் இலவச வீட்டுமனை பட்டா பெற முடியாத காரணத்தால் சத்தியா மறுநாள் 23.8.23 அன்று கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று அங்கிருந்த விஏஓ சுமதி என்பவரிடம் தனது வீட்டுமனை பட்டா கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். அதற்கு விஏஓ சுமதி, 'லஞ்சமாக பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்தால் மட்டுமே உங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க முடியும்' என்று கறாராகக் கூறியுள்ளார்.

இந்த தகவலை சத்யா தனது கணவர் அஸ்வினிடம் தெரியப்படுத்தியபோது, அவர் பணமில்லாமல் பட்டா பெற போலீசாரிடம் போகலாம் என தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சத்தியா மீண்டும் 29.8.23 அன்று மாராடி விஏஓ அலுவலகம் சென்று விஏஓ சுமதியை சந்தித்து தனது வீட்டுமனை பட்டாவைக் கொடுக்குமாறு கெஞ்சியுள்ளார்.

அதற்கு விஏஓ சுமதி, தான் கேட்ட லஞ்சப் பணத்தில் 3000 ரூபாய் குறைத்துக்கொண்டு 'ரூ.7000 கொடுத்தால் மட்டுமே வீட்டுமனை பட்டாவை வழங்க முடியும்' என்று கூறியுள்ளார். இதனையடுத்து லஞ்சம் கொடுக்க விரும்பாத சத்தியா திருச்சி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளித்தார். லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி மணிகண்டன் தலைமையிலான லஞ்ச ஒழிப்பு போலீசார் ஆலோசனையின் பேரில், சத்தியா நேற்று 30-08-2023 மதியம் மாராடி விஏஓ அலுவலகத்தில் விஏஓ சுமதியிடம் 7000 ரூபாய் லஞ்சம் கொடுக்கும்போது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக விஏஓ சுமதி கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அரசு இலவசமாக கொடுத்த வீட்டுமனை பட்டாவுக்கு லஞ்சம் கேட்ட விஏஓ லஞ்ச ஒழிப்பு துறையினரால் அதிரடியாக கைது செய்யப்பட்டது திருச்சி வருவாய்த்துறை வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதே சமயம் 'அரசாங்கம் கொடுத்த இலவச வீட்டுமனை பட்டாவை கொடுப்பதற்கு கூட இப்படி லஞ்சம் வாங்குகிறார்களே, இவர்கள் ஏதாவது வேலை செய்து அல்லது சகாயம் செய்து பட்டா தருவதாக இருந்தால் எப்படியெல்லாம் லஞ்சம் கேட்பார்கள்?' என்கிற அதிருப்தி குரல்கள் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

**2. சொத்தில் பெயர் மாற்றம்.. லஞ்சம் வாங்கிய பில் கலெக்டர்; லஞ்ச ஒழிப்புத்துறை அதிரடி நடவடிக்கை**

காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில் பில் கலெக்டராக ( வரி வசூலிப்பு அலுவலர்) பணிபுரிந்து வருபவர் ரேணுகா. மதுராந்தோட்டம் தெரு பகுதியை சேர்ந்த சுந்தர் என்பவர் தனக்கு சொந்தமான 460 சதர அடி இடத்தை தனது மகன்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பம் செய்திருந்தார்.



விஏஓ சுமதி




பில் கலெக்டர் ரேணுகா



எஸ்.ஐ. ரமா

பில் கலெக்டர் ரேணுகா பெயர் மாற்றம் செய்ய சுந்தரிடம் 15 ஆயிரம் லஞ்சமாக கேட்டுள்ள நிலையில், லஞ்சம் கொடுக்க மனமில்லாத சுந்தர் இது குறித்து காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரிடம் புகார் தெரிவித்தார்.

இந்நிலையில் ஆலடி தோப்புத் தெரு பகுதியில் கணக்கெடுப்பு பகுதியில் ஈடுபட்டிருந்த ரேணுகாவிடம் லஞ்ச பணம் ரூ.10 ஆயிரம் அளிக்கும் போது அங்கு மறைந்திருந்து லஞ்ச ஒழிப்பு போலீசார் ரேணுகாவை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.அதனையடுத்து கைது செய்யப்பட்ட பில் கலெக்டர் ரேணுகாவை காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில் வைத்து லஞ்ச ஒழிப்பு போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

3. **"<u>கூகுள் பே" மூலம் லஞ்சம் வாங்கிய பெண் அதிகாரி: குறி வைத்து தூக்கிய விஜிலென்ஸ் டீம்</u>**

*லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் பிடித்து விடுவார்கள் என்ற பயத்தில் கூகுள் பே மூலம் ரமா பணம் பெற்று வந்துள்ளார்.* கூகுள் பே மூலம் லஞ்சம் வாங்கிய காவல்துறை பெண் அதிகாரியை திருச்சி லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் குறி வைத்து தூக்கியது.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் முறையாக உரிமம் பெற்று கேரளா ஆயுர்வேதிக் மசாஜ் சென்டரை நடத்தி வந்தார் கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்தவர் சரத் மனைவி அஜிதா.

இந்த மசாஜ் சென்டர் மீது விபச்சார தடுப்பு பிரிவு போலீசார் கடந்த ஏப்ரல் 2023 -ல் வழக்கு பதிவு செய்துள்ளனர். அஜிதாவின் மீதான அந்த வழக்கில் தற்போது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை அஜிதாவிற்கு சாதகமாக முடித்து தருவதற்காகவும் மேலும் குண்டர் சட்டத்தில் வழக்குபதிவு செய்ய பரிந்துரை செய்யாமல் இருப்பதற்காகவும் ரூபாய் பத்தாயிரம் லஞ்சமாக விபச்சார தடுப்புப் பிரிவு உதவி ஆய்வாளர் ரமா கேட்டுள்ளார்.

அஜிதா தான் ஏற்கனவே தொழிலில் பாதிக்கப்பட்டுள்ளதாலும், தன்னால் தற்போது கடை நடத்த இயலாதாலும், தன்னால் பத்தாயிரம் தர முடியாது என்று கேட்டுக் கொண்டதன் பேரில், ரமா, 'அட்வான்சாக ரூபாய் 3000 கொடுத்தால் மட்டுமே உனது வழக்கை உனக்கு சாதகமாக முடித்து தர முடியும்' என்று கூறியுள்ளார்.

லஞ்சம் கொடுக்க விரும்பாத அஜிதா, திருச்சி லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் அளித்ததின் பேரில், டிஎஸ்பி மணிகண்டன் தலைமையில் ஆய்வாளர் சக்திவேல், சேவியர் ராணி, பிரசன்னவெங்கடேஷ், பாலமுருகன் மற்றும் போலீசார் கொண்ட குழுவினரின் ஆலோசனையின் பேரில், அஜிதாவிடம் இருந்து ரமா இன்று காலை சுமார் 11.00 மணி அளவில் ரூ.3000 லஞ்சம் பெற்ற போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக பிடித்தனர்.

லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் பிடித்து விடுவார்கள் என்ற பயத்தில் வழக்கமாக கூகுள் பே மூலம் மட்டுமே ரமா பணம் பெற்று வந்ததால் இப்போது புகார் வந்தாலும் பணமாக கை மாறும்போது கைது செய்தால் தான் சரியாக இருக்கும் என்று லஞ்ச ஒழிப்பு துறையினர் முடிவு செய்துள்ளனர். அதற்காக அஜிதாவிடம் 'என் வங்கி கணக்கில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த முறை மட்டும் பணமாகக் கொண்டு வந்து தருகிறேன்' என்று சொல்லச் சொல்லி, இன்று ரொக்கமாக பணம் கைமாறும்போது பிடித்துள்ளனர்.

திருச்சி மாநகரத்தில் 60 ஸ்பா சென்டர்கள் இயங்கி வருகிறது என்றும் ஒரு ஸ்பா சென்டருக்கு மாதம் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை SI ரமாவின் வங்கி கணக்கிற்கு கூகுள் பே மூலம் பெற்று வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், இத்தொகையை ரமா மாதா மாதம் லஞ்சமாகப் பெற்று தனது உயர் அதிகாரிகளுக்கும் பிரித்துக் கொடுத்துள்ளார் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எஸ்.ஐ. ரமா உயர் அதிகாரிகள் யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுத்துள்ளார் என்ற விபரங்களை லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரித்து நடத்தி வருகின்றனர். ரமா விபச்சார தடுப்பு பிரிவில் கடந்த நான்கு வருடங்களாக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

- திருச்சி ஷானு ( Kumudam News Desk )

# கடல் நீரை குடி நீராக்குவது மிகக் கேடானது!

**தமிழ்நாடு நன்கு மழை பொழியும் இடமாகும்! இது சௌதி இல்லை.ஆனால், பெய்யும் மழை நீரை எல்லாம் கடலுக்கு அனுப்பி மீண்டும், மீண்டும் கடல் நீரைக் குடிநீராக்க பல ஆயிரம் கோடிகளை விரயமக்குகிறார்கள்! கடல் நீரைக் குடிப்பது உடலுக்கு கேடு! சூழலுக்கும் கேடு.ஒரு விரிவான அலசல்;**

ஆசியாவிலேயே மிகப் பெரிய குடிநீர் திட்டமாக நெம்மேலியில் ரூ.4,276.44 கோடியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டியுள்ளார். 2026 ல் இந்த திட்டத்தை முடிக்க திட்டமிட்டு உள்ளனர். 40 கோடி லிட்டர் தண்ணீரை சுத்திகரிக்கும் இந்த கடல் குடிநீர் சுத்திகரிப்பு திட்டத்தின் மூலம் தாம்பரம் மாநகர மக்களுக்கும் சென்னையின் தென் மேற்கு பகுதியில் உள்ள 35 பகுதிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க முடியுமாம்.

சென்னையில் குடிநீர் பற்றாக் குறையை போக்கும் வகையில் கடந்த 2003-2004-ம் ஆண்டு கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் அன்றைய ஜெயலலிதா அரசால் அறிவிக்கப்பட்டது. அதன் படி மீஞ்சூர் காட்டுப்பள்ளி மற்றும் நெம்மேலி என இரண்டு இடங்களில் தினமும் தலா 10 கோடி லிட்டர் (100 மில்லியன் லிட்டர்) கொள்திறன் கொண்ட கடல்நீரை குடி நீராக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

இதன் மூலம் சென்னை மக்களுக்கு கடல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த இரு சுத்திகரிப்பு நிலையங்களும் சென்னையின் மொத்த குடிநீர் தேவையில் 20 சதவீதத்தை பூர்த்தி செய்து வந்தன. இந்நிலையில் நெம்மேலியில் 2வது திட்டமாக கடல்நீரை குடிநீராக்கும் நிலையம், எடப்பாடி பழனிசாமி ஆட்சியின் போது 2019-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. 15 கோடி லிட்டர் (150 மில்லியன் லிட்டர்) கொள்ளளவு கொண்ட இந்த சுத்திகரிப்பு ஆலையின் பணிகள் ரூ.1516 கோடியே 82 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வந்தது. இந்த பணிகள் அனைத்தும் இப்போது முடிவுறும் தருவாயில் உள்ளது.





சென்னையில் ஆண்டு தோறும் சராசரியாக 1300-1350 மில்லிமீட்டர் மழை பெய்கிறது. இந்த அளவு மழை பெய்யும் நகரத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்படுகிறது என்றால், அது யாருடைய தவறு?. பெருகி வரும் மக்கள் தேவையை கருத்தில் கொண்டு நீர் ஆதாரங்களை பாதுகாக்காமல் தொடர்ந்து ஆக்கிரமிப்புகளை செய்வது தான் காரணம்!

2015 ஆம் ஆண்டு மாபெரும் மழை,வெள்ளத்தால் சென்னை திணறியது. சுமர் 300 டி.எம்.சி தண்ணீர் கொட்டித் தீர்த்தது! நாம் அவ்வளவையும் சமர்த்தாக கடலுக்கு அனுப்பி விட்டு, அடுத்த ஆண்டே தண்ணீர் பற்றாகுறை என கூப்பாடு போட்டோம். இதன் மூலம் தண்ணீர் பற்றாகுறை என்பது செயற்கையாக உருவாக்கப்படுகிறது. அதன் மூலம் பல்லாயிரம் கோடி பெறுமான சூழலுக்கு கேடான திட்டங்களை அரசியல்வாதிகள் வெளி நாட்டு கடன் உதவி பெற்று செயல்படுத்தி ஊழலில் திளைக்கிறார்கள்!

**கடல் நீர் கேடானது;**

கடல் நீர் குடிக்கத் தகுந்தது அல்ல. அதை சுத்திகரித்தாலும் குடிப்பது நல்லதல்ல. காரணம், அதில் உள்ள கழிவுகளையும், உப்பையும் மட்டுமே நம்மால் சுத்திகரிக்க முடியும்.

அப்படி சுத்திகரிக்கப்பட்ட பிறகு அது ஒரு உயிர்ப்பற்ற சக்கை நீராகும். அதில் இயற்கையான தண்ணீருக்கான சக்தி கிடையாது. இதில் மனிதனுக்கு நன்மை செய்யும் எந்தக் கனிமங்களும், நுண்ணுயிர்களும் இல்லை. கடல் நீரை குடி நீராக்க இரும்பு குளோரைடு, பாலி அக்ரிலிக் அமிலம், அல்கலைன் அமிலம், சோடியம் சல்பைடு போன்ற ரசாயனக் கலவைகள் சேர்க்கபடுகின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இயற்கை தண்ணீருக்கு என்று ஒரு மகிமை உள்ளது. ஒருவனின் குணாம்சத்தை தீர்மானிக்கும் சக்தி தண்ணீருக்கு உள்ளது. நான் காவிரி நீரைக் குடித்து செழிப்பாக வளர்ந்தவன் என்றும், தாமிரபரணி தண்ணீரைக் குடித்து வளர்ந்த வீரத் தமிழன் இன்றும் பலர் பேசக் கேட்கலாம். அந்த இயற்கையான நீரின் சத்து நம் ரத்தத்தில் கலப்பதன் மூலம் நாம் ஆரோக்கிய வாழ்க்கைக்கு உத்திரவாதம் ஆகிறது. ஆனால், கடல் நீர் என்பது குடிக்கக் கூடாதது. அரபு நாடுகளில் பாலை வனத்தில் வாழும் மக்கள் உள்ள நாடுகளில் இந்த திட்டம் வேறு வழியின்றி செயல்படுத்தப் படுகிறது. ஆனால், நல்ல மழைப் பொழிவு உள்ள நமக்கு தேவை இல்லை.

மேலும் கடல் நீரை குடி நீராக்குவது அதிக செலவு பிடிக்கக் கூடியது! 40 கோடி லிட்டர் தண்ணீர் தயாரிக்க சுமார் நாற்பது லட்சம் ரூபாய் பணம் செலவாகிறது. இதுமட்டுமின்றி, 40 கோடி லிட்டர் தண்ணீரை சுத்திகரிக்க இரண்டு லட்சம் கோடி லிட்டர் கடலில் இருந்து எடுக்க வேண்டும். அப்படிக் கடலில் இருந்து நீரை ராட்சதக் குழாய்கள் மூலம் மிக வேகமாக உறிஞ்சி எடுக்கும் போது அதில் பல்லாயிரக்கணக்கான கடல் உயிரினங்கள் அள்ளிச் செல்லப்பட்டு மடிகின்றன. மேலும் லார்வா, மீன் முட்டைகள் உள்ளிட்ட நுண்ணுயிர்கள் நீரின் விசை மற்றும் அழுத்தத்தால் சாகடிக்கப்பட்டு விடுகின்றன.

இது போதாது என மீதி 1,60,000 லிட்டரை மீண்டும் கடலில் கழிவாகக் கொட்டும் போது கடலின் சுற்றுச் சூழலுக்கு கேடு என்கிறார்கள் சூழலியல் நிபுணர்கள். இதனால் கடலில் வாழும் மீன்கள், ஆமைகள் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படும் என்கிறார்கள். இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கபடும். சென்னையிலும், அதைச் சுற்றிலுமாக 4.000 க்கு மேற்பட்ட ஏரிகள் உள்ளன. அவற்றை சிரத்தையுடன் உயிர்பித்தாலே போதுமானது. அபரிமிதமான இயற்கை தண்ணீரை நாம் பெறலாம்.

இவ்வளவு கேடுகள் இருந்தும் இது போன்ற திட்டங்களில் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டுவதற்கு திட்டத்தின் மூலம் கிடைக்கும் ஆதாயங்களே காரணமாகும். நகரமயமாக்கம், நரகமாக்கத்தில் தான் நம்மை கொண்டு விடுகிறது.

அறம் இணைய இதழ்-***சாவித்திரி கண்ணன்*** August 22, 2023

---

## நாளிதழ்களில் சில செய்திகள்



2

### பெற்றோரை பராமரிக்கும் நிபந்தனை இல்லாவிட்டாலும் 'செட்டில்மென்ட்' பத்திரத்தை ரத்து செய்யலாம்: ஐகோர்ட்

சென்னை, செப். 10-

'பெற்றோரை பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனை, செட்டில்மென்ட் பத்திரத்தில் வெளிப்படையாக இடம் பெறவில்லை என்றாலும், ஆவணத்தை ரத்து செய்யக் கோர, அதை நிபந்தனையாக கருதலாம்' என, சென்னை ...

[illegible]

எஸ்.எம்.சுப்ரமணியம்

### உதவியாளர்கள் பணி தேர்வில் குளறுபடி?



**விண்ணப்பித்த 7 நாட்களில்**

### மின் இணைப்பு வழங்காவிட்டால் இழப்பீடு



சென்னை, செப். 21: "புதிய மின் இணைப்புக்கு விண்ணப்பித்து 7 நாட்களில் இணைப்பு வழங்கப்படவில்லை என்றால் இழப்பீடு வழங்கப்படும்" என மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மே மாதத்தில் மின்சார விநியோக சட்டத்தில் திருத்தம் செய்ய வரைவு அறிக்கையை வெளியிட்டது. அதில் புதிய மின் இணைப்பு கோரிய 7 நாட்களில் மின் இணைப்பை வழங்கவிட்டால் நுகர்வோருக்கு இழப்பீடு வழங்குவது உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகளை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கியது.

இது குறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியிருப்பதாவது: புதிய மின் இணைப்புகளுக்கு தற்போது உள்ள நடைமுறைப்படி விண்ணப்பித்த நாளில் இருந்து அதிகபட்சம் 30 நாட்கள் வரை காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் விண்ணப்பங்கள் சரிபார்ப்பின் போது உரிய தகவல்கள் இல்லாத போது அதை சரி செய்ய 7 நாட்கள் வரை கால அவகாசம் எடுக்கிறது. இந்த நடைமுறையால் வாடிக்கையாளர்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் நுகர்வோருக்கு விரைவில் மின் இணைப்புகளை வழங்க மின் வாரியம் முடிவு செய்துள்ளது.

அதன் படி மின் இணைப்பை பொருத்துவதற்கான போதிய உள் கட்டமைப்பு வசதிகளும், விண்ணப்பம் சரியாக இருந்தால் அதிகபட்சம் ஒருவாரத்தில் இணைப்பு வழங்கப்படும். ஒருவேளை அதற்கு மேல் தாமதமானால் அடுத்த 10 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.100 இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த 10 நாட்களுக்குள் மின்வாரிய அதிகாரிகள் கண்டிப்பாக மின் இணைப்பு வழங்கப்படும். மேலும் புதிய மின் இணைப்பை வழங்க பகிர்மான அலகுகள் இல்லையென்றாலும் அதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். புதிய துணை மின்நிலையத்தில் இருந்து கொண்டு வர வேண்டுமென்றாலும் அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இழப்பீடு வழங்கப்படும் 10 நாட்களை தாண்டி இணைப்பு வழங்குவது தாமதிக்கப்படாது. மேலும் புதிய இணைப்பிற்கான விண்ணப்பத்தில் ஏதேனும் தகவல்கள் பூர்த்தி செய்யவில்லை, போதிய ஆவணங்கள் இணைக்கப்படவில்லை என்றால் அது குறித்து விண்ணப்பித்தவருக்கு மூன்று நாட்களுக்குள் தகவல் தெரிவிக்க வேண்டும்.

தந்தை ஈமச்சடங்கு உதவியை பெற

## கலெக்டருக்கு லஞ்சப்பணத்தை மணியார்டர் அனுப்பிய பெண்

### “கமிஷன் கேட்டவர்களுக்கு பிரித்து கொடுங்கள்”



சுதா

**‘சுரீர்’ சுதா**

சுதாவைப் போல் இப்படி சுரீர் என்று வெளுக்கும் துணிச்சல் எல்லோருக்கும் எளிதில் வராது. நம் பக்கம் நியாயம் இருக்கும் வரை எந்த எல்லைக்கும் நாம் துணிச்சலுடன் செல்லலாம் என்பதைத்தான் சுதா மற்றவர்களுக்கு தனது நடவடிக்கை மூலம் கட்டிக் காட்டி இருக்கிறார்.

‘‘மக்களின் வீட்டில் வாழ்வோ, எழவோ எது நடந்தாலும் சரி அதிகாரிகளுக்கு தேவை மாதச்சம்பளமும் லஞ்சமும்தான். பெண்களின் கழுத்தில் தாலி ஏறினாலும் இவர்களுக்கு லஞ்சம் தேவை. தாலி இறங்கினாலும் இவர்களுக்கு தேவை லஞ்சப்பணம்தான்...’’

இப்படி ஒரு கடிதத்தை படித்த விழுப்புரம் கலெக்டர் என்ன நினைத்து இருப்பார். ஆனால் அந்த கடிதத்தின் நிறைவுரையும் அதோடு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூ.2000 மணியார்டர் பணமும்தான் உச்சம்.

‘‘ஐயா, இதோடு ரூ.2 ஆயிரம் பணத்தையும் அனுப்பி இருக்கிறேன். அதை உங்கள் நிர்வாகத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு நீங்களே பிரித்து கொடுத்து விடுங்கள்’’ என்று வார்த்தையை சாட்டையாக்கி விளாசி இருந்தார் அந்த இளம் பெண்.

இருபத்தேழு வயதான சுதாவுக்கு இப்படி ஒரு கடிதத்தையும், மணியார்டரையும் கலெக்டருக்கு அனுப்ப எப்படி துணிச்சல் வந்தது? அந்த அளவுக்கு அவர் வெறுத்துப் போக என்னதான் நடந்தது...

விழுப்புரம் மாவட்டம் திருநாவலூர் அருகே உள்ள ஆனத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் தொப்பையன் (55). இவரது மனைவி குப்பம்மாள் (50). இவர்களது மகள்தான் சுதா.

சுதாவுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. கணவர் பெயர் திருப்பதி (37).

கடந்த ஆண்டு ஆகஸ்டு 30-ந்தேதி தொப்பையன் இறந்து விட்டார்.

தந்தை இறந்த சோகத்தில் மகள், கணவரை பறிகொடுத்த தவிப்பில் மனைவி. இப்படி மொத்த குடும்பமும் சோகத்தில் மிதந்தாலும் மீண்டு அடுத்த கட்டத்துக்கு போய்த்தானே ஆகவேண்டும்.

சுதா தனது தாயை அழைத்துக் கொண்டு கிராம நிர்வாக அலுவலகத்துக்கு சென்றார். தந்தையின் இறப்புச் சான்றிதழ் மற்றும் ஈமச்சடங்குக்கான அரசு உதவியை பெற விண்ணப்பித்தார்.

பணம் இன்று வரும்... நாளை வரும்... என்று எதிர்பார்த்து ஏமாற்றமே மிஞ்சியது. பல முறை அந்த அலுவலக படிக்கட்டுகளை ஏறி இறங்கிய போதும் சுதாவுக்கு பிரச்சினை தீரவில்லை.

ஒரு கட்டத்தில் ‘‘அய்யா, எங்க அப்பா செத்துப்போய் ஒரு வருஷம் ஆவப்போவுது. எப்பதான்யா ஈமச்சடங்கு பணம், இறப்பு சான்றிதழ் கிடைக்கும்? என்று பரிதாபமாக கேட்டுள்ளார்.

அட என்னம்மா நீ, ஒன்னுமே புரியாத பொண்ணா இருக்கியே. சும்மா, சும்மா வந்து போனா வேலை நடக்குமா? கொடுக்க வேண்டியதை கொடுத்தாத்தானே வேலை நடக்கும். ஒரு மூவாயிரம் ரூபாயை வெட்டு. அடுத்த ரெண்டு நாளில் உனக்கு எல்லாம் கிடைத்துவிடும் என்று அங்கிருந்த அதிகாரி சூட்சமத்தை போட்டு உடைத்திருக்கிறார்.

அதை கேட்டதும் சுதா அதிர்ந்து போனார். பாவிகளா, அரசு கொடுக்கும் ஈமச்சடங்கு உதவியை வாங்குவதிலுமா காசு கேக்கிறீங்க.... என்று மனதுக்குள் பொருமியபடியே வெளியேறி இருக்கிறார்.

சரி, பணம் மெதுவாக வரட்டும் முதலில் இறப்பு சான்றிதழையாவது கேட்போம் என்று தாலுகா அலுவலகத்துக்கு சென்று முறையிட்டுள்ளார். அங்கு 6 முறை நடந்தும் வேலைக்கு ஆகலை.

அதன்பிறகு கலெக்டர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார். இதையடுத்து கடந்த நவம்பர் மாதம் இறப்பு சான்றிதழை பெற்றார்.

அதன் பிறகு மீண்டும் அரசு வழங்கும் ஈமச்சடங்கு நிதியை பெற உளுந்தூர்பேட்டை தனி தாசில்தார் அலுவலகத்தில் குப்பம்மாள் மனு கொடுத்தார்.

அந்த மனுவும் விசாரணைக்காக கிராம உதவியாளர் கைக்குத்தான் போனது. விசாரணையை தொடங்கிய அந்த பலே கில்லாடி அதிகாரி ‘ஏம்மா, எங்கு போனாலும் எழுத வேண்டியது நான்தான் புரியுதா. நான்தான் முதலிலேயே சொன்னேனே! ஒரு ஆயிரம் ரூபாய் கொடும்மா. வேலையை முடிச்சு தாரேன்.

இந்தப் பணம் மொத்தத்தையும் நான் வைத்துக் கொள்ளப் போவதில்லை. வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி, தனிவட்டாட்சியர் என அனைவருக்கும் பங்கு போகும். நீ எங்கு போனாலும் சுற்றி சுற்றி இங்குதான் வரவேண்டும் என தனது நீதி வழுவாத அதிகாரத்தின் மாட்சிமையை விளக்கி இருக்கிறார்.

அதன்பிறகுதான் சுதாவுக்கு கோபம் கொந்தளித்து இருக்கிறது. அட, போங்கடா புண்ணாக்குகளா. எங்க அப்பா ஈமச்சடங்கு பணத்தை பங்கு போட நினைக்கிறீங்களே. கேவலம், நானே தருகிறேன் என்று விழுப்புரம் கலெக்டருக்கு விளக்கமாக கடிதம் எழுதி ரூ.2 ஆயிரம் பணத்தையும் அனுப்பி வைத்துள்ளார். அந்த கடிதத்தில் கிராம உதவியாளர் கேட்டுக் கொண்டதைப் போல் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி, தனிவட்டாட்சியர் ஆகியோருக்கு நீங்களே பிரித்து கொடுத்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

சாட்டையால் அடித்தால் வலி சில மணி நேரத்திலோ அல்லது சில நாளிலோ மறைந்து போகும் ஆனால் சுதா கொடுத்துள்ள இந்த வார்த்தை சாட்டை அடி இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் வலிக்கும்.

கேட்டதும் பணத்தை கொடுத்து இருந்தால் சந்தோசமாக வாங்கி பாக்கெட்டில் போட்டு இருப்பார்கள். ஆனால் சுதா தன் சொந்தப் பணத்தில் செத்துப்போன நிர்வாகத்துக்கு ஈமச்சடங்கு நடத்தி இருக்கிறார்.

**கலெக்டர் எடுக்கும் முடிவு ‘கரெக்ட்’ பண்ணட்டும்**

சுதா அனுப்பிய மணியார்டர் விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. கலெக்டர் சுப்பிரமணியம் இந்த புகார் மனு தொடர்பாக தனி தாசில்தார், வருவாய் அதிகாரி, கிராம நிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர் ஆகியோரிடம் இன்று விசாரணை நடத்துகிறார்.

உண்மையை கண்டு பிடித்து நிர்வாகத்தில் நிலவும் அவலங்களை ‘கரெக்ட்’ செய்ய வேண்டியது கலெக்டரின் கடமை. அதே நேரத்தில் இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாகவும் அமைய வேண்டும்.

---

## தகவல் பெறும் உரிமைச் சட்ட வார விழாவுக்கு நிதி எங்கே?

### மாவட்ட நிர்வாகங்கள் கேள்வி

சென்னை, செப். 24: தகவல் பெறும் உரிமைச் சட்ட வார விழாவை நடத்தத் தேவையான நிதியை எங்கே பெறுவது என மாவட்ட நிர்வாகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

தகவல் பெறும் உரிமைச் சட்ட விழிப்புணர்வு வார விழாவை, அக்.5 முதல் 12-ஆம் தேதி வரை நடத்த தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது. அக்.8-ஆம் தேதி நடைப்பயணம், மாரத்தான் போட்டிகள் நடத்தவும் கோரப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே தகவல் உரிமைச் சட்டம் குறித்து விழிப்புணர்வு சார்ந்த போட்டிகளை நடத்தவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வாரம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த அரசின் சார்பில் நிதி ஏதும் ஒதுக்கப்படாத நிலையில், நிகழ்ச்சிகளை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்ற கேள்வியை மாவட்ட நிர்வாகங்கள் எழுப்புகின்றன.

இது குறித்து, மாவட்ட நிர்வாகங்கள் கூறியதாவது:

விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படவில்லை. மேலும், தகவல் ஆணையர்கள் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் முகாமிட்டு வழக்குகளை விசாரிக்கின்றனர்.

இதற்கான செலவுகளே அதிகமாகின்றன. இந்தச் செலவுகளுடன், இப்போது விழிப்புணர்வு வார விழாவையும் நடத்தக் கோரினால், அதற்கான நிதிக்கு எங்கே போவது என்ற கேள்வியை எழுப்பியுள்ளன.

இது குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்ட ஆர்வலர்கள் கூறியதாவது: தகவல் பெறும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்து 18 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் போதுமான அளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதில் கவனம் செலுத்தாமல், வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வுகளைத் தர வேண்டும். தகவல் ஆணையர்களை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் நிலுவையிலுள்ள மேல்முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்படாமல் இருந்தன. இப்போது ஆணையர்கள் நியமிக்கப்பட்ட நிலையிலும், மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கே மீண்டும் திருப்பி அனுப்பி தகவல் அனுப்பச் சொல்வது இதுவரை இல்லாத நடைமுறை.

தாமதமாக தகவல் வழங்கும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அபராதம் ஏதும் தகவல் ஆணையத்தால் விதிக்கப்படுவதில்லை. விசாரணைக்கு வரும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு பயணப்படி வழங்கப்படுகிறது.

ஆனால், விசாரணைக்கு வரும் ஆர்வலர்களுக்கு எந்தவிதமான பயணப்படியும் வழங்கப்படுவதில்லை.

எனவே, இதுபோன்ற விஷயங்களில் கவனத்தைச் செலுத்துவதுடன், மேல்முறையீட்டு மனுக்களுக்கு உரிய தீர்வை தகுந்த காலத்தில் வழங்க வேண்டும். இதைவிடுத்து, விழிப்புணர்வு வார விழாக்களில் நேரத்தையும், அரசு நிதியையும் செலவிட வேண்டியத் தேவையில்லை என்றனர்.

---

## Tangedco will pay ₹100/day for delay in new connection

Venkadesan.S
@timesgroup.com

**Tangedco must give connection within a week or pay ₹100 for 10 days as compensation. Currently, Tangedco on average takes 30 days to effect new low-tension supply**

Chennai: New consumers will get power connections within a week when the infrastructure is in place or can demand Tangedco to pay compensation of ₹100 per day for a maximum of 10 days, according to the newly amended Tamil Nadu Electricity Distribution Code.

The revised code allows the utility to delay the connection beyond seven days only when the supply to the premises requires an extension of distribution mains or the commissioning of new substations. Even then Tangedco cannot exceed the time specified in the code.

A Tangedco official said they are yet to get working instructions about the new code.

"As soon as we get, we will abide by the rules," he said. Currently, Tangedco on average takes 30 days to effect new low-tension supply, which is the maximum period permitted as per the old rules.

Officials said ground level staff have been instructed to give new connections within a day of application if everything is in place.

The amended code also makes it mandatory for Tangedco to intimate the consumer in case of incomplete application within three days. Earlier, the staff were permitted to take seven days to return applications for rectification and re-submission.

Tangedco records show that in April, it took up to 59 days to effect some new low-tension connections. In the same month, 17,714 new LT connections were given.

While meter shortage is cited as a reason at many instances for the delay in effecting new connections, Tangedco management has directed the assistant engineers to keep the rolling stock of meters when the new working instructions are issued.

---

நெல்லை அருகே காய்கறி கடை உரிமையாளரிடம்

## ரூ.25 ஆயிரம் லஞ்சம் வாங்கிய பெண் சர்வேயர் உட்பட இருவர் கைது




நெல்லை, செப்.22: நெல்லை அருகே காய்கறி கடை உரிமையாளரின் நிலத்தை அளவீடு செய்ய ரூ.25 ஆயிரம் லஞ்சம் வாங்கிய பெண் சர்வேயர் மற்றும் உதவியாளரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.

நெல்லை அருகேயுள்ள கங்கைகொண்டான் வடகரையைச் சேர்ந்த மாரியப்பன் மகன் புதுமாடசாமி (44). இவர் கங்கைகொண்டானில் காய்கறி கடை நடத்தி வருகிறார். இந்நிலையில் புதுமாடசாமி, வடகரை பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு 26 சென்ட் நிலம் விலைக்கு வாங்கினார். இந்த நிலத்தை அளந்து தனி பட்டா வழங்க நெல்லை தாலுகா அலுவலகத்தில் அதற்கான கட்டணத்தை கட்டி மனு கொடுத்தார். அந்த மனு கங்கைகொண்டான் பிர்கா சர்வேயர் லிங்கம்மாளிடம் சென்றது.

இதையடுத்து புதுமாடசாமி, சர்வேயர் லிங்கம்மாளை சந்தித்து தனது நிலத்தை அளந்து தருமாறு கூறியுள்ளார். அதற்கு அவர் ரூ.30 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக கூறப்படுகிறது. ஆனால் அவர் ரூ.25 ஆயிரம் கொடுப்பதாக ஒத்துக் கொண்டார். பின்னர் அவர் இதுகுறித்து நெல்லை மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் செய்தார்.

லஞ்ச ஒழிப்பு ஏடிஎஸ்பி மெக்லரின் எஸ்கால், இன்ஸ்பெக்டர் ராபின் ஞானசிங் ஆகியோர் புதுமாடசாமியிடம், சர்வேயர் லிங்கம்மாள் கேட்ட லஞ்ச பணத்தை ரசாயனம் தடவி கொடுத்தனர். நேற்று கங்கைகொண்டான் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த சர்வேயர் லிங்கம்மாளை சந்தித்து ரூ.25 ஆயிரத்தை புதுமாடசாமி கொடுத்தபோது அவர், அருகில் இருந்த உதவியாளர் சாந்தியிடம் பணத்தை கொடுக்கச் சொன்னார்.

அதன்படி புதுமாடசாமி பணத்தை அவரிடம் கொடுத்தார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு ஏடிஎஸ்பி மெக்லரின் எஸ்கால் தலைமையில், இன்ஸ்பெக்டர் ராபின் ஞானசிங், சிறப்பு எஸ்ஐக்கள் மாரியப்பன், சீதாராமன், ஏட்டுகள் பிரகாஷ், ஜேம்ஸ், ராபின்ராஜ், முருகன், பிரவீனா உள்ளிட்டோர் சாந்தியையும், லிங்கம்மாளையும் கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். அவர்களிடம் இருந்த பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

தொடர்ந்து அவர்கள் இருந்த இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். பின்னர் அவர்களை நெல்லை லஞ்ச ஒழிப்பு கோர்ட்டில் நீதிபதி (பொறுப்பு) மனோஜ்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தி நெல்லை கொக்கிரகுளம் பெண்கள் சிறையில் அடைத்தனர். கைதான சர்வேயர் லிங்கம்மாள் (31), பாளையங்கோட்டை பெருமாள்புரத்தையும், உதவியாளர் சாந்தி (31) கங்கைகொண்டான் ராஜபதியையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

ஆவணங்களை தொலைத்து விட்டதை ஏற்க முடியாது

## கோர்ட்டு உத்தரவை நிறைவேற்றாத அதிகாரி ஒருவரையாவது பணி நீக்கம் செய்ய வேண்டும்

### மதுரை ஐகோர்ட்டு கருத்து

மதுரை, செப்.27-

கோர்ட்டு உத்தரவுகளை நிறைவேற்றாத அதிகாரிகளில் ஒருவரையாவது பணி நீக்கம் செய்ய வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு நீதிபதி கூறினார்.

**கோர்ட்டு அவமதிப்பு வழக்கு**

நெல்லை பாளையங்கோட்டையை சேர்ந்த சிவஞானம் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்திருந்த கோர்ட்டு அவமதிப்பு வழக்கு மனுவில் கூறி இருப்பதாவது:-

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014-ம் ஆண்டு உடல் நலக்குறைவால் பெங்களூருவில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ செலவு ரூ.9 லட்சத்தை காப்பீட்டு தொகையில் வழங்குமாறு மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குனருக்கு விண்ணப்பித்திருந்தேன். ஆனால் எனது மனு நிராகரிக்கப்பட்டது.

இதுகுறித்து கடந்த 2017-ம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கில் மருத்துவ செலவினத்தொகையை வழங்க ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்தது. ஆனால் தற்போது வரை அந்த தொகை வழங்கப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கோர்ட்டு அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதி பட்டு தேவானந்த் முன்பு விசாரணைக்கு வந்தது.

**துறை ரீதியாக நடவடிக்கை**

வழக்கு விசாரணையின் போது, அப்போதைய நெல்லை மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குனர் நெடுமாறன் கோர்ட்டில் ஆஜராகியிருந்தார். அப்போது, மனுதாரரின் கோரிக்கை அடங்கிய ஆவணங்கள் தொலைந்து விட்டதால் காலதாமதம் ஏற்பட்டு விட்டது என அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, அரசு பஸ்களில் பயணி தனது டிக்கெட்டை தொலைத்து விட்டால் அவருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. நடத்துனர் டிக்கெட் பண்டலை தொலைத்து விட்டால், அவரை பணியில் இருந்து நீக்கும் நிலை உள்ளது. ஆனால், மருத்துவ துறையில் ஒரு உயரதிகாரி ஆவணங்களை தொலைத்து விட்டதாக கூறுவதை ஏற்க முடியாது. ஐகோர்ட்டு உத்தரவை நிறைவேற்றாத இதுபோன்ற அதிகாரிகளில் ஒருவரையாவது பணி நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

இது அதிகாரிகளுக்கு பாடமாக அமையும். பணியில் உள்ள அரசு அதிகாரிகளை சரி செய்ய வேண்டியுள்ளது. கோர்ட்டு உத்தரவுகளை செயல்படுத்த அரசு அதிகாரிகள் தயங்குவது ஏன்? காப்பீட்டு நிறுவனம் வழங்க வேண்டியதை அவர்களது சொந்த பணத்தை செலவழிப்பது போல நினைத்துக்கொள்கின்றனர் என நீதிபதி கடும் விமர்சனம் செய்தார். அத்துடன் ஆவணங்களை தொலைத்த அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டதுடன், மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டதால் வழக்கும் முடித்து வைக்கப்படுகிறது என தெரிவித்தார்.

---

**<u>குறிப்பு</u>:- தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த இதழில் தலைவர் மடல் எழுதவில்லை.**

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- அக்டோபர் 2023**

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20


## காவல் நிலையங்களில் ஒரு நபரைக் கைது செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய உச்ச நீதிமன்றத்தின் 11 கட்டளைகள்

1. கைது செய்கின்ற அதிகாரி அடையாள அட்டை பொருத்தியிக்க வேண்டும்.
2. கைது செய்த உடன் அந்த இடத்திலேயே கைது குறிப்பாணை தயாரிக்க வேண்டும்.
3. கைது செய்யப்படும் தகவலை உறவினர் நண்பர் தெரிந்தவருக்கு தெரிவிக்க வேண்டும்.
4. கைது செய்யப்பட்ட விபரம் 8 மணி முதல் 12 மணி நேரத்திற்குள் உறவினர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
5. தான் விரும்பும் ஒருவருக்கு தகவல் தெரிவிப்பதற்கான உரிமை உண்டு என்பதை கைது செய்யப்பட்டவருக்கு தெரிவிக்க வேண்டும்.
6. காவலில் உள்ள இடத்தில் கைது குறித்த தகவல் தெரிவிக்கப்ப்பட்ட விபரம் மற்றும் எந்த அதிகாரியின் பொறுப்பில் இருக்கிறார் என்ற என்ற விபரங்களை பதிவேட்டில் குறிக்க வேண்டும்.
7. கைது செய்யப்பட்டவர் உடல்நிலையைப் பரிசோதித்து சோதனை குறிப்பு தயார் செய்ய வேண்டும்.
8. கைது செய்யப்ப்பட்டவரை 48 மணி நேரத்திற்கு ஒரு முறை மருத்துவ பரிசோதனை சோதனை செய்ய வேண்டும்.
9. கைது செய்யப்பட்ட ஆவணங்களை குற்றவியல் நடுவருக்கு அனுப்ப வேண்டும்.
10. கைது செய்யப்ப்பட்டவரை விசாரிக்கும் போது வழக்கறிஞர் உடன் இருக்க வேண்டும்
11. கைது பற்றிய தகவல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்

( ஆதாரம் : டி.கே.பாசு - எதிர் மேற்கு வங்க அரசு, உச்ச நீதி மன்ற வழக்கு எண். W.No.(CRL) 539,96)

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின்


ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச் செயலாளர் : ஜி கோவிந்தசாமி:



Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Oct 2023
Due to corona published online)


**எலிமுயன் றனைய ராகி உள்ளதம்
வளன்வலி யுறுக்கும்உளம் இலாள ரோடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ!**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23


**Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI** and published through online on its behalf of **Thiru G Govindasamy** (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai - 600023 and printed by **Thiru G Parthasarathy at VPS PRINTERS**, No 292, TH Road, Chennai-600005; Editor: **Thiru V.Karthikai Rajan (8778312823)**


இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!